Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 18 சனிக்கிழமை (04.10.2014) பக்கங்கள் 20 ஓசை - 004

## புதிய கிராம அலுவலர்களுக்கு அடுத்த வாரம் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட கிராம அலுவலர்களுக்கான நியமனக் கடிதம் எதிர்வரும் 8 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்றுத் தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்டிருந்த கிராம அலுவலர்களுக்கு 3 மாதப் பயிற்சிகள் கடந்த மார்ச்

19 ஆம் பக்கம் பார்க்க...

## மன்னாரிலிருந்து இந்தியாவுக்கு பயணிகள் கப்பல் சேவை

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை அடுத்த வருடத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இந்தப் பயணிகள் கப்பல் சேவை நடத்தப்படவுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் சர்வதேச ஐ.ஆர்.கொன நிறுவனம் இந்தச் சேவையை நடத்தவுள்ளது.

இதேவேளை தலைமன்னாருக்கும் மடுவுக்கும் இடையிலான ரயில் பாதை புனரமைப்புக்கள் தற்போது நிறைவடைந்து கொண்டிருப்பதாக ஐ.ஆர்.

19 ஆம் பக்கம் பார்க்க...

## கிளிநொச்சிக்கு குடிநீர் விநியோகம்; புதிய செயற்றிட்டம் பற்றி ஆராய்வு



நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் தொடர்பில் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் வாசஸ்தலத்தில் இச் சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்

19 ஆம் பக்கம் பார்க்க...

# ஆயுதம் ஏந்திய கட்சிகளுடன் கூட்டுச்சேர என்னால் முடியாது

## சர்ச்சை கிளப்பினார் விக்கி கூட்டமைப்பு கூட்டத்தில் சலசலப்பு



(யாழ்ப்பாணம்)

ஆயும் ஏந்தி வன்முறையில் ஈடுபட்ட கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து இருக்க என்னால் முடியாது.'

அதாவது, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்ற ஆயுதமேந்திய வன்முறைக் கட்சிகளுடன் சேர்ந்திருக்க முடியாது. ஆகவேதான் நான் தமிழரசுக் கட்சியைச் சார்ந்திருக்கின்றேன். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், வடமாகாண சபை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வடமாகாண முதலமைச்சரின் காரியாலயத்தில் இடம்பெற்றது. அச்சமயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது, முதலமைச்சர் வேட்பாளராக நான் நிற்க வேண்டுமென்றால் கூட்டமைப்பில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் என்னை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே நிற்பேன் என்று சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்த விடயத்தை அவருக்கு ஞாபகப்படுத்தி, நீங்கள் கூட்டமைப்பினுடைய ஒரு பிரதிநிதியாகத்தான் கடந்த தேர்தலில் பங்குபற்றியிருந்தீர்கள், ஆகவே நீங்கள் கூட்டமைப்புக்குத்தான் உரியவர், எனவே தனியொரு கட்சியைச் சார்ந்தவராக பிரதிபலிக்காமல் பொது நிலைப்பாட்டைத்தான் நீங்கள் எடுக்கவேண்டும் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேட்டுக் கொண்டார். இதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதிலளிக்கையில் நான் இதைக் கூறுவதையிட்டு நீங்கள் ஆத்திரப்படக் கூடாது. நான் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்ற ஆயுதமேந்திய வன்முறைக் கட்சிகளுடன் சேர்ந்திருக்க முடி

19 ஆம் பக்கம் பார்க்க...

## மன்னிப்புச் சபையின் அறிக்கை; கவலைப்பட எதுவும் இல்லை

### இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

சர்வதேச மன்னிப்புச் சபையினால் அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் கவலைப்படத் தேவையில்லை என இலங்கை மனித உரிமை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகவும், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் ஒடுக்கப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை 40 பக்க அறி

19 ஆம் பக்கம் பார்க்க...

## பாப்பரசரை சந்தித்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரோமில் பாப்பரசரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி இலங்கைக்கு விஜயம்

19 ஆம் பக்கம் பார்க்க...

## அத்துமீறும் மீனவர் விவகாரம்; இந்தியக் குழு விரைவில் கொழும்புக்கு

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றமை தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையாக இந்திய அரசு உயர் மட்டக் குழு ஒன்றை விரைவில் இலங்கைக்கு அனுப்பவிருக்கிறது என செய்திகள் வெளியாகியிருக்கின்றன. எனினும் அக்குழுவின் விஜயத்திற்கான திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இருநாட்டு மீனவர் சர்ச்சை விவகாரத்துக்கு மேலும் அப்பால் சென்று இருநாட்டு மீன்பிடித் தொழில் முறைமை தொடர்பான விவகாரமாக இதனை விரிவுபடுத்திக்கையாளத் தீர்மானிக்கபட்டிருப்பதாக இலங்கை கடற்றொழில் திணைக்கள இயக்குநர் நாயகம் நிமால் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். மீன்வளத்தை அடியோடு சூறையாடும் விதத்திலான கடல் படுக்கையில் மீனை வாரி அள்ளும் முறைமைக்குப் பதிலாக ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு மீனவரை வழிப்படுத்துவதன் மூலம் மீனவர்

19 ஆம் பக்கம் பார்க்க...

## சுற்றுலா மையமாக நெடுந்தீவை மாற்ற ஏற்பாடு

### அமைச்சர் யாப்பா தகவல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள நெடுந்தீவுப் பகுதியை விசேட சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் நெடுந்தீவில் அழகான பல இடங்கள் இருப்பதாகச் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக இயற்கையாக குதிரைகள் உலாவித்திரியும் நெடுந்தீவு மேலும் பல

19 ஆம் பக்கம் பார்க்க...

## புங்கன் குளத்தில் கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு துப்புரவு பணியினை மேற்கொண்ட போது, வீட்டு காணியில் கிளிப் கழற்றப்பட்ட நிலையில் இருந்த பழைய கைக்குண்டு ஒன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். புங்கன்குளம் புகையிரதப் பாதைக்கு அண்மையில்

19 ஆம் பக்கம் பார்க்க...



**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்**

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3800)

சாதாரண தர பரீட்சார்த்திகளுக்கு;

# தேசிய அ.அட்டை பெறுவதற்கு ஆணையாளர் விசேட ஏற்பாடு

இவ்வருடம் சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க முடியும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்துள்ளார்.

பாடசாலை வசமுள்ள இந்த மாணவர்களின் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை இரண்டு வாரங்களுக்குள் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கிடைப்பதில் கால தாமதம் நிலவுமாயின், அடையாள அட்டைகளை விநியோகிப்பதில் சிரமத்தை எதிர்நோக்க நேரிடும் என்றும் ஆணையாளர் கூறியுள்ளார்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் 011 255 5616 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது 011 250 6458 மற்றும் 011 259 3634 ஆகிய பக்ஸ் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தத்தமது விண்ணப்பங்களின் நிலை குறித்து மாணவரகள் அறிந்துகொள்ள முடியும்.

இதேவேளை இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு இவ்வருடம் மூன்று இலட்சத்து 70 ஆயிரம் பாடசாலை பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளதுடன், அவற்றுள் சுமார் இரண்டு இலட்சம் பேருக்கான தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சேவை 30 நிமிடத்தால் அதிகரிப்பு

பயணிகளின் வேண்டுகோளுக்கமைய யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 8.00 மணிக்கு செயலாற்றப்படும் சகல உள்ளூர்ப் பாதைகளுக்குமான இறுதிநேர பேருந்துச் சேவைநேரம் கடந்த 1 ஆம் திகதியிலிருந்து 8.30 மணி வரைக்கும் நீடித்துச் செயலாற்றப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

**மக்கள் வங்கி அறிவித்தல்**

மக்கள்வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.08.2013 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 14.10.2014 தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லிவீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும், ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்குள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/3533)

## 350 சிறுவர்கள் பங்குபற்றும் சிறுவர் தின விழா இன்று

(யாழ்ப்பாணம்)

சிறுவர் தினத்தை முன்னிட்டு மொபிட்டல் நிறுவனம் நடத்தும் சிறுவர் தின விழா இன்று யாழ்.பழைய பூங்காவில் இடம்பெறுகின்றது.

கிளிநொச்சியிலுள்ள சிறுவர்கள் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர். இவர்கள் காலையில் கிளிநொச்சியில் இருந்து அழைத்துவரப்பட்டு யாழ்.கார்கில்ஸ் சினிமா திரையரங்கில் திரைப்படக் காட்சியை கண்டுகழிப்பதுடன், பகல் 11 மணி முதல் பழைய பூங்காவில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார்கள்.

இதற்காக பழைய பூங்காவில் நவீன விசேட விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், விசேட அலங்காரங்களும் செய்யப்பட்டுள்ளன.

ஆதரவற்ற சிறார்களின் எதிர்கால மகிழ்வான வாழ்வுக்கென இக் காணிவேல் விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மொபிட்டல் நிறுவனத்தின் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர். (இ)




யாழ்ப்பாணம் நோபிள் இன்ரர்நஷனல் பேப்பர் லங்கா நிறுவனத்தால் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் USAID நிறுவன ஆதரவுடன் நிறுவப்படவுள்ள காகித உற்பத்தி தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுக்காலை 10 மணிக்கு இடம்பெற்றது. இதில் மேற்படி நிறுவன அதிகாரிகளும், ஏனையோரும் கலந்துகொண்டதனைக் காணலம்.

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1097 | திகதி 02.10.2014

வெற்றி எண்கள் / ஆங்கில எழுத்து

**01 09 14 63 M**

**ஜக்பொட் பரிசு ரூ. 4,07,56,580/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,07,56,580/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 50,000/= | ரூ. 7,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 267 | 1,000/= | ரூ. 2,67,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 513 | 1,000/= | ரூ. 5,13,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12096 | 60/= | ரூ. 7,25,760/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6198 | 40/= | ரூ. 2,47,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 158264 | 20/= | ரூ. 31,65,280/= |
| ஆங்கில எழுத்து | 23026 | 20/= | ரூ. 4,60,520/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 70,79,480/=

**எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்**
**ரூபா 41,066,100/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.10.06 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356 டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 335546/7

(C/3535)

**UNIVERSITY OF JAFFNA**

**Changes in Examination Time Table**
**Third Examination in Business Administration First Semester - 2013**
(New & Old Syllabus)

The following changes have been made in the Third year First semester examination timetable for the academic year 2012/2013 for the course units of **BAD BE 3101 & BAD ESL III - Business English**, which was earlier scheduled on 06.10.2014. All the other examinations will be held as per the schedule.

| Date | Course Unit | Subject | Venue | Time |
|---|---|---|---|---|
| Third Examination in Business Administration First Semester – 2013 (New & Old Syllabus) | | | | |
| 09.10.2014 Thursday | BAD BE 3101 / BAD ESL III | Business English | New Commerce Hall | 01:00pm-04:00 pm |

For More Details Visit To the Faculty Web Site: http://www.jfn.ac.lk/maco

Registrar
University of Jaffna
03.10.2014
(C/3534)

# நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் கட்டட புனரமைப்பு வேலைகள்

(திருநெல்வேலி)

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் கட்டடத் திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இம் மன்றத்தின் சமூக நலத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குப் போதிய இட வசதி இல்லாமையின் காரணமாக மன்றத்தின் பின்பக்கம் இடிக்கப்பட்டு ஒரே கூரையாக அகலமான கட்டடம் அமைக்கும் நோக்கோடு திருத்த வேலை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக 10 இலட்சம் ரூபா பணம் செலவாகும் என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. வடமாகாண சபை அவைத் தலைவர். சீ.வீ.சிவஞானம் சங்கிலியன் மன்றத்தின் கட்டடத்திருத்த வேலைக்காக வடமாகாண சபையின் மூலதன நிதியிலிருந்து ஒருஇலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 50ஆயிரம் ரூபாவை வழங்கி உதவியுள்ளார். மீதமான நிதியுதவியினை வெளிநாட்டிலுள்ள மன்றத்தின் மூத்த உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை இம் மன்றத்தின் கலையரங்கும் திருத்தப்படவுள்ளது. கலையரங்குக்கு மேல்மாடியொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (137)



யாழ்.சென்பெனடிக் கல்லூரி மாணவர்களின் ஆற்றலையும் திறமைகளையும் வளர்க்கும் விழா நேற்று கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இவ்விழாவிற்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களை கௌரவிப்பதைக் காணலாம்.

படம்:- ஆர்.ராஜகுமார்

# கைதடி முதியோர் இல்லத்தின் 2 ஆம் நாள் நிகழ்வுகள்



கைதடி அரசமுதியோர் இல்லத்தின் 60 ஆம் ஆண்டு விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை முதியோர் இல்ல வளாகத்தில் நடைபெற்றது.

இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோ வனின் பிரதிநிதியாக உதவிச்செயலர் ஜே.எவ்.எக்ஸ். செல்வநாயகம் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரனால் எழுதப்பட்ட இறுதிப் பயணம் எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் நூலின் மதிப்பீட்டு ரையை யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்தியதுடன் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சீவரத்தினம் ராஜதீபன் என்பவரால் இந் நூலுக்கான முழுமையான நிதியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (90)

## ராஜகோபுரம் அமைக்கும்பணி

ஆவரங்கால் நடராஜராமலிங்கேஸ்வரர் பர்வதவர்த்தனி அம்மன் ஆலயத்தில் இராஜகோபுரம் ஆலயத்தின் தெற்குப்புறமாக அமைந்துள்ள அம்மன சந்நிதிக்கு முன்பாக அமைக் கப்பட்டு வருகின்றது.

புலம்பெயர்வாழ் அன்பர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்களின் ஒத்துழைப் புடன் பலகோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இராஜ கோபுரத்திற்கான வேலைகள் யாவும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (85)

# மாவையும் பினாத்தலும் தமிழ் அரசியலும் தோல்வியும்




மாவைக்குத் தலைவர் பதவி கிடைச்சதுதான் கிடைச்சுது, ஆள் படுகிற பாடு..... அப்பப்பா, சொல்லி வேலையில்லை.

மட்டக்களப்பிலயும் போய் ஆள் வெளுத்து வாங்கியிருக்கிறார்.

உரிமை கிடைக்கும்வரை உறங்கப்போவதில்லை.

தமிழினம் என்றும் போராடப்பின்னுக்கு நிண்டதில்லை. சர்வதேச சமூகத்தின்ரை ஒத்துழைப்போடை தமிழீழத்தை அமைப்போம்..' எண்டெல்லாம் முழங்கு முழங்கெண்டு முழங்கியிருக்கிறார்.

இதைக் கேட்கக் கேட்க எனக்கு 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை' எண்ட பழமொழிதான் நினைவுக்கு வருது.

இப்பிடி லொஜிக் இல்லாமல் – அர்ப்பணிப்பைப்பற்றிய அக்கறையில்லாமல், யதார்த்தத்தைப் பற்றிச் சிந்திக்காமல், கண்டபடி – வாய்க்கு வந்தபடியெல்லாம் கதைக்கிறதில, கதை விடுகிறதில மாவை அண்ணை பலே கில்லாடி.

இப்பிடிக் கதை விட்டுக் கதை விட்டே ஆள் அரசியல்ல நல்லா உழைச்சிட்டார்.

இப்ப தமிழரசுக்கட்சியின்ரை தலைவராகக் கூட பதவி உயர்ந்திட்டார்.

தமிழ்ச்சனங்களின்ரை அரசியல் அறிவால கிடைச்ச பரிசுதான் இதெல்லாம்.

தமிழ்ச்சனங்கள் சரியாக முறையாகச் சிந்திச்சிருந்தால் மாவையும் சரி மாவையைப்போல புலுடாக் கதை பேசுகிற ஆட்களும்சரி எப்பவோ காலியாகியிருப்பினம்.

இந்த மாதிரி அரசியல் செய்ய முடியாமல் எப்பவோ கரை ஒதுங்கியிருப்பினம்.

ஆனால், தமிழர்களின்ரை சாதி உணர்வும் சாதி உணர்வுக்கு ஒத்தமாதிரி இருக்கிற இன உணர்வும் தமிழ்த்தேசியம் எண்ட போர்வையில இனவாதமாக மாறி மாவை போன்றவையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கு.

இந்த இனவாதம்தான் மாவை கோஸ்டியை இன்னும் தமிழர்களின் தலைவர்களாகவும் உச்சத்தில வைச்சிருக்கு.

அப்பிடி உச்சத்தில வைச்சிருக்கிற வரைக்கும் மாவை போன்ற ஆட்கள் இப்பிடித்தான் பேய்க்கதைகளை எல்லாம் கதைச்சுக் கொண்டிருப்பினம்.

இதை தமிழ் ஊடகங்கள் வேற கொண்டாடினால் பிறகு சொல்லவும் வேணுமா?

ஆராவது நாலு மாணவர்கள் கடந்த காலத்துப் பத்திரிகைகளை ஒரு ஆய்வுக்கு எடுத்துப் படிச்சால் தமிழ் அரசியல் தலைமைகளின்ரை கேலிக்கூத்துகளையும் பம்மாத்துகளையும் தமிழ் ஊடகத்துறையின்ரை கேவலத்தையும் நல்லாய் அறியக் கூடியதாக இருக்கும்.

மாவையும் சிறிதரனும் சூனாப் பீனா எண்ட மண்டைக்காய் சுரேஸ் பிரேமச்சந்திரனும் இப்ப கதைக்கிறதைப்போலத்தான் அப்பவும் – நாப்பது வருசத்துக்கு முந்தியும் தமிழ் அரசியல் தலைவர்கள் பேய்க்கதைகளை எல்லாம் கதைச்சுக் கொண்டிருந்திச்சினம்.

இதில நாங்கள் ஒரு விசயத்தைக் கவனிக்க வேணும். இப்பிடி இந்தத் தலைவர்கள் பேய்க்கதைகளைப் பேய்த்தனமாகக் கதைச்சாலும் தங்கட காரியங்களில் மட்டும் வலு விண்ணன்கள்.

எப்பிடியும் தங்கட குடும்பங்களை நல்ல மாதிரி வைச்சிருக்கிறதில இவையள மாதிரி ஆட்களைக் காணேலாது.

அப்பிடித் தங்களைப் பாதுகாப்பாக வைச்சுக்கொண்டுதான் சனங்களைத் தெருவில விடுகிற அரசியலைச் செய்தவை. இன்னும் அப்பிடித்தான் செய்து கொண்டிருக்கினம்.

மாவை இப்ப தமிழரசுக்கட்சியின்ரை தலைவர். நாப்பது வருசமாக அரசியல்ல இருக்கிறார். ஒரு பாராளுமன்ற உறுப்பினராக வேற இருக்கிறார். இப்பிடியெல்லாம் இருக்கிற ஒருதருக்கு எவ்வளவு பொறுப்பிருக்க வேணும்.

தமிழ்ச்சமூகமோ பெரியதொரு போரைச் செய்து. அதில முழுசாகத் தோற்றுப்போய்க் காயங்களோடயும் வலியோடயும் இருக்குது.

இந்த நேரத்தில துன்பப்பட்டிருக்கிற தமிழ்ச்சமூகத்தைப் பாதுகாத்து, அதை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பைச் செய்யிறதை விட்டிட்டு, இப்பிடிக் கண்ட பாட்டுக்கு கதைச்சுக் கொண்டிருக்கிறது நல்லதில்லை.

பொதுவாகவே தமிழ் அரசியல்வாதிகள் எண்டால் கோமாளிகள் எண்ட மாதிரியான ஒரு அபிப்பிராயம்தான் பலபேரிட்டயும் இருக்கு.

ஏனெண்டால் அந்தளவுக்கு தமிழ் அரசியல்வாதிகள் தலைமுறை தலைமுறையாக கோமாளித்தனமாகத்தான் நடந்தும் கொண்டிருக்கினம்.

இந்தக் கோமாளித்தனங்களுக்கான முடிவு எப்ப வரும்?

தமிழர்கள் தங்கட அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டு. எல்லாத்தையும் இனமானக் கண்ணோட்டத்தில பார்க்காமல் ஜனநாய அடித்தளத்தில நிண்டு கொண்ட விரிவான முறையில சிந்திச்சால்தான் இந்தக் கோமாளித்தனங்கள் மாறும்.

இதுக்கு படிச்ச மனிசரும் பத்திரிகைகளும் மற்ற ஊடகங்களும் கொஞ்சம் வேலை செய்ய வேணும். அந்த வேலை அறிவு பூர்வமான வேலையாகவும் இருக்கோணும்.

அப்பதான் மாற்றங்கள் நடக்கும்.

இல்லையெண்டால்.. மாவை இன்னும் பத்து இருவது வருசத்துக் இந்தமாதிரித்தான் பினாத்திக் கொண்டிருப்பார்.

கோபத்துடன் செயற்படுபவனும், புயலில் கப்பல் விடுபவனும் சரிசமமானவர்கள்.
- பீச்சர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நுண்ணுயிரி இழுபறியில் மனிதன்!

மனிதர்களுக்கும் நுண்ணுயிரிகளுக்குமான துவந்த யுத்தத்தில் ஒருசமயம் மனிதர்கள் வெல்வதும் சிலசமயம் அந்த நுண்ணுயிரிகள் வெல்வதுமான தகவல்களை விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வுகளில் கண்டு அறிவித்தபடி இருக்கிறார்கள்.

பூசணம் எனப்படும் ஃபங்கஸ் (fungus) உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து உள்ளவை. பூசணங்கள் சில நேரம் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் உதவுகின்றன.

பெனிஸிலின் என்கிற ஒரு மருந்து ஒரு பூசணத்திலிருந்து உருவான மருந்துதான். ஆனால் பெரும்பாலும் அவை உயிரினங்களை அழிக்கவும், இறந்த உயிர்களை மீண்டும் இயற்கையின் சுழற்சியில் சேர்க்க உதவுவனவாகவே இருக்கின்றன.

இன்று உலகம் முழுவதிலும் தட்ப வெப்ப நிலை மாற்றமும், அதிகரித்துவிட்ட உயிரினங்களின் அதிகரித்த தேவைகளுமாக பூமி ஒரு நெருக்கடியில் சிக்கி இருக்கிறது. இதனால் காலம் காலமாக வாழ்ந்து வந்த தாவரங்கள், பல வகை பூச்சிகள், சிறு மிருகங்கள், நீர்வாழ் உயிரினங்கள் போன்ற பலவும் தம் இயற்கைச் சூழலை இழந்து திணறிக் கொண்டிருக்கின்றன.

இவற்றை இந்தப் பூசணங்கள் எளிதே தாக்கி பெரும் எண்ணிக்கையில் அழித்துக் கொண்டிருக்கின்றன என்கிறது இன்றைய ஆய்வு.

புத்தாயிரத்தின் ஆரம்பத்தில் புதிதாக அன்ரி பயொட்டிக்குகளால் அழிக்கப்பட முடியாத நச்சு நுண்ணுயிரிகளைக் கண்டுபிடித்தார்கள். மனிதனின் வயிற்றில் வாழும் என்ற இந்த நுண்ணுயிரி, நோய்வாய்ப்பட்ட மனிதனில் வளர்கின்றன. அழிக்கப்பட முடியாதவை என்பதுடன், இவை வித்து வடிவில் மருத்துவமனைகளின் மேற்பரப்புகளில் காத்திருக்கின்றன.

நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளிகளை மருந்துகளால் அழிக்கமுடியாத இந்த நுண்ணுயிரி பீடிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பல பத்தாயிரம் பேர்களை இவை பலி கொள்கின்றன. மருத்துவத்துறைக்கு இது சவாலாகவே இருந்து வருகிறது.

இப்போது, இந்த நுண்ணுயிரிகள் எங்கு உருவாகின, எப்படி பரவின என்பதை மரபணு ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர். ஏழ்மை நாடுகளையும் மூன்றாம் உலகத்தின் அதிகரித்த சனத்தொகையின் ஆரோக்கியமற்ற வாழ்வுமுறையுமே புதுப்புது நோய்களுக்கான காரணமெனக் குற்றம் சாட்டுவது மேற்குலகின் வழக்கம். அந்த இறுமாப்பைக் குலைக்கும் வகையில் இந்த நுண்ணுயிரி மேற்குலகின் மையத்தில், பிட்ஸ்பேர்க் மற்றும் மொன்ட்ரியல் ஆகிய இடங்களில் பிறந்து உலகெங்கும் பயணிக்கிறது என்பதை மரபணு பரிசோதனைகளால் கண்டுபிடித்துள்ளனர்.

இதேசமயம் நுண்ணுயிரிகளால் ஏற்பட்ட புதிய நன்மைச் செய்தி ஒன்றும் விஞ்ஞானிகளிடமிருந்து வந்துள்ளது. லுகீமியா என்கிற புற்று நோயால் தாக்கப்பட்டு மரணத்தறுவாயில் நின்றிருந்த ஒரு சிறுமிக்கு, எய்ட்ஸ்/க்கு காரணமான வைரஸை மறு அமைப்புச் செய்து அந்த நுண்ணுயிரிகள் அவளுடலில் செலுத்தப்பட்டன. இவை புற்று நோய் உயிரணுக்களை மரபணு ரீதியாகச் சென்று கொல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதன்படியே அந்தச் சிறுமி புற்று நோயிலிருந்து தப்பிவிட்டாள். அவளுடலில் வேறெங்கும் புற்று நோய் தாக்கவில்லை. இது புற்று நோய் சிகிச்சையில் மனிதருக்குச் சமீப காலத்தில் கிடைத்து வரும் சில வெற்றிகளின் தொடக்கம்.

இதிலிருந்து மனித குலம் பல வகைப் புற்று நோய்களைத் தோற்கடிக்கும் காலத்துக்கான பாதை தெரியத் தொடங்கி இருக்கிறது என்று மருத்துவ ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

மனிதன் தோன்றுவதற்கு முன்பே தோன்றிவிட்ட நுண்ணுயிரிகளை மனிதன் வெல்லும் வழி உருவாகியிருக்கிறது.

- ஆசிரியர்

# இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ச்சியான ஆதரவு

## தென்கொரியா உறுதியளிப்பு

ஆசியாவின் மிளிர்ந்து வரும் ஆச்சரியமாக இலங்கையை மாற்றுவதில் எமது நாட்டின் முழுமையான ஆதரவு எப்போதும் உண்டென தென்கொரியாவின் இலங்கைக்கான தூதுவர் ஷாங்வொன் - ஷாம் தெரிவித்தார். போருக்கு பின்னர் தற்போது ஏற்பட்டு வரும் துரித அபிவிருத்தி மிகவும் பாராட்டப்படவேண்டியது.

இருநாடுகளுக்குமிடையிலான இந்த பலமான நட்புமுறைமையானது இனிவரும் காலங்களிலும் நினைவுகூரப்பட வேண்டியதொன்றாகும். இதற்கு சான்றாக நட்புறவினைப் பேணும் வகையில் 2012 ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி கொரியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தினையும், கொரிய தலைவர் கடந்த வருடத்தில் நமது நாட்டுக்கு மேற்கொண்ட விஜயத்தினையும் குறிப்பிடலாம்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கொரிய அரசாங்கம் சிறந்த ஆதரவினை வழங்கி வருகிறது. அத்துடன் மனித மூலவளங்களை மற்றும் ஆளுமை அபிவிருத்திகளை விருத்தி செய்யும் வகையில் கொய்கா நிகழ்ச்சித்திட்டம் தென்கொரியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அபிவிருத்திப் பாதையில் ஏற்பட்ட அனுபவங்களை பரிமாறிக் கொள்வதன் மூலம் கொரிய அபிவிருத்தியில் மேலும் பங்கு கொள்ள முடியுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்திலும் சிறந்த ஆளுமைத்திறனின் மூலமுமே இவ்வாறான துரித அபிவிருத்தி இலங்கையில் ஏற்பட்டு வருகிறது.

இந்த அபிவிருத்தியின் முக்கிய செயற்பாடாக நல்லிணக்க செயற்பாடு, புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டு மானங்களை சுட்டிக்காட்ட முடியும் என்றார்.

# முடிவுக்கு கொண்டுவரப்படாத ஊவா தேர்தல் வன்முறைகள்

## விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு

ஊவா தேர்தல் எவ்வாறு வெற்றி கொள்ளப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. ஊவாவில் இன்னமும் தேர்தல் வன்முறைகள் முடிவுக்குக்கொண்டு வரப்படவில்லை என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இயலுமானவரையில் இழி செயல்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டே சிரமப்பட்டு ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றியீட்டியது.

ஊவாவில் பின்பற்றிய வழிமுறைகளைப் எதிர்வரும் தேர்தல்களில் பின்பற்ற அரசாங்கம் முயற்சிக்கின்றது.

டிபெண்டர் வாகனங்களின் மூலம் வெளியாட்களை பிரசாரத்திற்கு களமிறக்கி, தேவையற்ற அதிகாரிகளை இடமாற்றம் செய்து, தேவையான அதிகாரிகளை கடமைக்கு அமர்த்தி, பிரதேசசபை உறுப்பினர்கள் முதல் அமைச்சர்கள் வரையில் அனைவரையும் ஈடுபடுத்தி, அரசாங்கம் ஊவாவில் பிரசாரம் செய்தது. பௌத்த சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் மொனராகலை பாணி யிலும், தமிழ் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் பதுளை பாணியிலும் தேர்தல்களில் வெற்றியீட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றது.

18 ஆம் திருத்தச் சட்டத்தின் அமைவாக ஜனாதிபதி மஹிந்த மூன்றாம் தவணைக்காக போட்டியிட முடியாது என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் உச்ச நீதிமன்றம் முடியும் என சொல்லக்கூடும். சட்டத்தை ஒடுக்கி ஆட்சி செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றார்.

# குழந்தைகளின் உரிமைகள் பறிபோக இடமளியோம்

## - பிரதமர் கூளுரை -

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க உள்ள குழந்தைகளின் உரிமைகள் எந்த வகையிலும் பறிபோக இடமளிக்க மாட்டோம். சகல வேளைகளிலும் எமது அரசு அவர்களின் உரிமைகளுக்காக பாடுபடுகிறது என பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தின் கிறிஸ்தவ மதப் பிரிவு தேசிய மத ஐக்கிய சிறுவர் மன்றத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த விழா கொழும்பு கிறிஸ்தவ தேவாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு வருகை தந்துள்ள குழந்தைகள் பல்வேறு அங்கவீனர்கள் ஆவர். அவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்க முடியாது. அவர்களுக்கும் சகல உரிமைகளையும் வழங்க வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு துறைகளின் ஊடாக நிதி ஒதுக்கி பிள்ளைகளின் உரிமைகளையும் சமூக வாழ்வியல் சுற்றாடலையும் விரிவுபடுத்த திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளார். சகவாழ்வை உறுதி செய்வதன் மூலம் பிள்ளைகளைச் சரியான பாதையில் வழி நடத்தலாம் என்றார்.

அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தர், பேராசிரியர் சங்கைக்குரிய அக்கமஹா பண்டித்த கம்புறுகமுவே வஜிர தேரர் ,ஜனாதிபதி செயலக கிறிஸ்தவ மதவிவகார இணைப்புச் செயலர் சங்கைக்குரிய சரத் ஹெட்டியாராச்சி, உட்பட மதத்தலைவர்கள், பெற்றோர் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம் உலகத்தின் உதவி ஜனாதிபதிக்கு அதிகரிக்கும்

## - அஸ்வர் எம்.பி. தெரிவிப்பு -

ஆசியாவில் மிகவும் சிரேஷ்ட தலைவராக கருதப்படும் ஜனாதிபதி மகிந்தராஜபக்சவுக்கு முஸ்லிம் உலகத்தின் உதவி அதிகரிக்கும் என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இலங்கையின் முஸ்லிம் மக்கள் அன்பை வென்றுள்ள ஜனாதிபதிக்கு அவரது தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு முஸ்லிம் ஆதரவு வழங்கி, அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

ஜனாதிபதி, பலஸ்தீனத்திற்கு நிதியுதவி வழங்கியதை எதிர்க்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதில்லை என்று முஸ்லிம் மக்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்குள் முஸ்லிம்களின் 'ஷிரியா' சட்டத்தை விமர்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் கருத்துகளுக்கு எதிரான முனைப்புகளை இதுவரை அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மேற்கொள்ளவில்லை.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சியின் மீது முஸ்லிம்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாவையார் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை

**அம்பாறை மாவட்ட த.தே.கூட்டமைப்பு உறுப்பினர்களின் எதிர்ப்பினை சமாளிக்க முடியாமல் தமிழரசுக்கட்சித் தலைவர் மாவையார் தலை கவிழ்ந்து கொழும்பு திரும்பியுள்ளார். இத்தனைக்கும் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் மாவையேதான். ஒரு மாவட்டத்தையே கையாளத் தெரியாமல் திணறும் மாவையார் எப்படி வடக்கு கிழக்கு மக்களை வழிநடாத்தப் போகின்றார் என்பது கடவுளுக்கே வெளிச்சம்.**

பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை என் பார்களே அது எப்படி என்பதை கடந்த (27.09.2014) அன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

அண்மையில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் மாவை சேனாதிராஜா புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அவரது தலைமையை வரவேற்று யாழ்ப்பாணத்தி லும் மற்றும் சில இடங்களிலும் வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதுபோன்று கிழக்கு மாகாணத்திலும் தான் வரவேற்கப்படவேண்டும் என்கின்ற அவரது வயோதிப கால ஆசையை நிறைவேற்றும் முயற்சி மட்டக் களப்பு அம்பாறை பிரதேசங்களில் இடம்பெற்றது.

மட்டக்களப்பில் சுமார் 150 கட்சி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு வரவேற்பு நிகழ்வுகளை ஓரளவு ஒப்பேற்றி விட்டனர். ஆனால் அம்பாறை மாவட்டத் திலோ முகத்தில் கரிபூசப்பட்டு மாவை திருப்பிய னுப்பப் பட்டிருக்கின்றார்.

கல்முனையில் த.தே.கூட்டமைப்பு தலைமைகள் முஸ்லிம் காங்கிரசுடன் பேசுவதற்குரிய ஒரு சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது. ஆனால் இந்தச்சந்திப்பு நிகழ்வை நடாத்த விடாமல் அம்பாறை மாவட்ட கட்சி முக்கி யஸ்தர்கள் உட்கட்சி போராட்டம் ஒன்றை மேற் கொண்டு அதில் வெற்றி கண்டுள்ளனர்.

இதன் காரணமாக புதிய தலைமைக்கான வரவேற்பு நிகழ்வுகள் நிராகரிப்பு நிகழ்வுகளாக மாறி மாவை யார் அவமதிப்புடன் திரும்பியிருக்கின்றார்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் தெரிவான மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதி கள் போன்றோரை கொண்ட முக்கியஸ்தர்களின் குழுவே இப்போராட்டத்தை தமது தலைமையின் முடிவுக்கு எதிராக வெளிப்படுத்தியுள்ளது.

எமது மாவட்டத்தில் உள்ள எவரது கருத்துக் களுக்கும் இடமளியாது தாங்களாகவே தமிழ்த்தேசிய



கூட்டமைப்பு முடிவெடுப்பது பெரும் வேதனையைத் தருகின்றது என குறிப்பிட்டு இம் முடிவினை எடுத் ததற்கான காரணங்களை அவர்கள் பின்வருமாறு பட்டியல்படுத்தி இருக்கின்றார்கள்.

* கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தரமு யர்த்தப்படுவதற்கு நேரடி எதிரியாக முஸ்லிம் காங்கிரஸ் இருந்தமை.

* மத்திய மற்றும் கிழக்கு மாகாணசபையின் ஊடாக வழங்கப்படும் வேலை வாய்ப்புக்களில் முற்றாக தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை.

* கிழக்கு மாகாணசபை ஊடாக பகிர்ந்த ளிக்கப்படும் அபிவிருத்தி விடயங்களில் தமிழர் பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன.

* கல்முனை மாநகரசபை பொத்துவில் பிரதேச சபை ஊடாக தமிழர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதிகள்.

* கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆட்டோ சங்கத்தின் பிரச்சினை.

* வீதிகளுக்கு பெயர் மாற்றுவதற்கான பிரச் சினை

* நில ஆக்கிரமிப்பு, கலாசார சீர்கேடுகள் போன்ற பிரச்சினைகள் அவற்றில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த எதிர்ப்பினை சமாளிக்க முடியாமல் தமிழ ரசு கட்சி-முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பு ரத்தாகி யுள்ளது. தமிழரசுக்கட்சித் தலைவர் மாவையார் தலை கவிழ்ந்து கொழும்பு திரும்பியுள்ளார்.

இத்தனைக்கும் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும் மாவையேதான். ஒரு மாவட்டத்தையே கையாளத் தெரியாமல் திணறும் மாவையார் எப்படி வடக்கு கிழக்கு மக்களை வழி நடாத்தப் போகின்றார் என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை மாவையார் ஏற்றுக் கொண்ட பின்னர் எடுக்கப்பட்ட முக்கிய முடிவாக கொள்ளத்தக்க இம்முடிவினை அமுல்படுத்தும் ஆளுமையை கல்முனையில் மாவை யார் இழந்திருக்கின்றார்.

மறுபுறம் தமது கட்சிக்கும் கட்சித்தலைமைக்கும் ஏற்பட்ட இந்த அவமானத்தை உள்ளூரில் எதிர் கொள்ள முடியாமல் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வரவில்லை அவருக்கு சுகவீனம் அதனால் தான் சந்திப்பு இரத்தானது என்று 'அறிக்கை வீரன்' அரிய நேந்திரன் பி.பி.சியிடம் படாதபாடுபட்டு சமாளிக்க முனைந்தமை கேட்க பரிதாபகரமாக இருந்தது...

இந்த நிகழ்வுகள் கல்முனை மக்கள் எதிர்கொள் ளும் அன்றாட பிரச்சினைகளை எவ்வளவு தூரம் தமிழரசுக் கட்சியினர் அறிந்து வைத்திருக்கின்றனர்? அவர்களுடனான உறவும் நெருக்கமும் என்பது குறித்து கட்சித் தலைமை எவ்வளவு தூரம் அக் கறை கொண்டிருக்கின்றது?

சுருங்கச் சொன்னால் மக்கள் என்ன நினைக்கின் றார்கள் என்பது பற்றி கட்சி எதனை தெரிந்து வைத் திருக்கின்றது? என்கின்ற கேள்விகளை எழுப்பியி ருக்கின்றது.

இந்தக் கேள்விகளுக்கான விடைகள் யாதெனில் மக்களுக்கும் தமிழரசு கட்சியினருக்கும் இடையே எவ்வித தொடர்பாடலும் இல்லை என்பதே ஆகும். இதையே இக்கல்முனை நிகழ்வுகள் புலப்படுத்தி யிருக்கின்றன.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர் கொள் ளும் தனித்துவமான வாழ்வியல் சிக்கல்களுக்கு அம்மாவட்டம் வாழ் முஸ்லிம்களுடன் இணைந்து பிரச்சினைகளை அணுகுவதும், தீர்ப்பதும் முக்கிய மானதொன்றாகும்.

இந்த கல்முனை தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர் கள் முன்வைத்துள்ள பிரச்சினைகளில் பெரும்பாலா னவை உள்ளூராட்சி மன்ற நகரசபை அதிகாரங்கள் சம்பந்தப்பட்டவையாகும். அதனை இந்த கீழ்மட்ட அதாவது உள்ளூராட்சி மன்ற, நகரசபை மட்டங்க ளில் முதலில் எடுத்துச்செல்ல வேண்டும். அது பற்றி தமிழரசுக்கட்சி தலைமை இதுவரை எவ்வித அக்கறை யும் காட்டவில்லை.

கடந்த முதலாவது கிழக்கு மாகாணசபை ஆட்சிக் காலத்தில் மாகாண சபை முதலமைச்சர் என்னும் வகையில் மாவட்ட அபிவிருத்திசபை கூட்டங்களில் தலைமை பொறுப்பு வகித்த சந்திரகாந்தனால் இது போன்ற பல இன முறுகல் விடயங்களுக்கு அம் பாறை, மட்டக்களப்பு, திருமலை போன்ற மூன்று மாவட்டங்களிலும் தீர்வு காண முடிந்தமை குறிப் பிடத்தக்கதொன்றாகும்.

ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சதியால் இப்போது கிழக்கு தமிழர்கள் அனைவருமே அந்த தமக்கான பலமான குரலை இழந்து நிற்கின்றார்கள்.

சர்வதேசத்துக்கு காட்டுவதற்காக என்று சொல்லி மக்களின் பெரும்பான்மை வாக்குகளை சூறையாடிய தமிழரசுக் கட்சி தமது பிரதிநிதிகளுக்கு பதவிகளை யும் அந்தஸ்துகளையும் பெற்றுக் கொண்டதோடு மக்களை மறந்துவிட்டது. அவர்கள் எதிர்க்கட்சி ஆச னங்களை சூடாக்குவதை விடுத்து வேறு யாதொன்று செய்வதறியாது காலத்தை ஓட்டுகின்றனர்.

கடந்த மாகாண சபை ஆட்சியின்போது அம்பாறை தமிழ் மக்கள் நிலைமை வேறுவிதமாக இருந்தது. அவர்கள் மாகாணசபைக்கு தமக்கென மூன்று பிரதிநிதிகளை (செல்வராஜா, புஸ்பராஜா, நவரெட்ணராஜா) தெரிவு செய்திருந்தனர். அவர்கள் அவ்வேளை ஆளும் கட்சியாயிருந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் சார்பில் தெரிவாகியவர்கள் ஆகும்.

அதில் ஒருவரான நவரெட்ணராஜா கிழக்கு மாகாண விவசாய அமைச்சராகும் வாய்ப்பு கிடைத்தது. இது அம்பாறை மாவட்டத்தில் இன்று சிறுபான்மையாகிவிட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவத்துக்கு ஓரளவு பாதுகாப்பளித்தது.

ஆனால் இன்றைய நிலையில் 2008ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் வாக்குகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வரவால் கூறு போடப்பட்டதன் காரணமாக அம்பாறை சார்ந்து இரு மாகாணசபை உறுப்பினர்களே தெரிவாகினர். அவர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் எதிர்க்கட்சி ஆசனங்களில் உட்கார்ந்து காலத்தை கடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழர்களும் முஸ்லிம்களும் பிரிந்து நின்று சுமார் 30 வருடகாலம் பட்ட ரணங்கள் ஆறிவருகின்ற இத்தருணங்களில் மீண்டும் மீண்டும் இனங்களிடையேயான மனவருத்தங்களும் முரண்பாடுகளும் வளர்ந்து செல்ல இடமளிக்கக் கூடாது. தமிழ் முஸ்லிம் ஒற்றுமை என்பது சாமானிய மக்களிடத்தில் முதலில் கருக்கொள்ள வேண்டும் அதுவே பலமான ஒற்று மைக்கு வழிவகுக்கும்.

மக்களுக்காக எடுக்கப்படுகின்ற எந்த ஒரு முடிவும் அடிமட்டங்களில் இருந்து கட்சியின் மேல்மட்டங்களை நோக்கிச் செல்ல வேண்டும். அதுவே மக்களின் குரலாக கட்சித் தலைமைகளை பிரதிநிதித்துவம் பண்ண வழிவகுக்கும்.

அதைவிடுத்து அடி மட்டங்களில் பிரச்சினைகளை பூதாகரமாக வைத்துக்கொண்டு அவ்வ தீர்க்கப்படாமல் தேர்தலை அடிப்படையாக கொண்டு கட்சித் தலைமைகள் எடுக்கின்ற மேல் மட்ட முடிவுகள் மக்கள் மீது திணிக்கப்பட்டால் அது மக்களுக்கானதாக ஒருபோதும் இருக்காது என்பதற்கு கல்முனை சம்பவம் தமிழரசு கட்சிக்கு ஒரு சிறந்த பாடத்தை கொடுத்திருக்கின்றது.

எனவே தமிழரசுக் கட்சியினர் முஸ்லிம் காங்கிரசுடன் பேசுவதற்கும் அடுத்த தேர்தலை குறிவைத்து அரசை பழிவாங்கவும் நாய்படாப் பாடு

**எழுகதிரோன் கட்டுரையிலிருந்து**

படுவதை விடுத்து இன்று கிழக்கு மாகாணசபை யால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பாரபட்சங்கள் என்ன? இந்த நிலைமை ஏற்படுவதற்கு தாம் விட்ட அரசியல் பிழைகள் எப்படி காரணமாயின? 40 வீதம் தமிழ் மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழரேனும் இல்லாத அமைச்சரவை உருவாகு வதற்கு வழிவகுத்த பாவத்தை தாங்கள் செய்த மைக்கு என்ன பிராயச்சித்தம் செய்ய முடியும்? என்பது பற்றி முதலில் யோசிக்க வேண்டும்.

கிழக்கு தமிழர்களின் வாக்குகளை பிரித்து பிள்ளையானை பழிவாங்குவதாக எண்ணி தாங்கள் செய்த பாவமான காரியமே இப்பிரச்சினைகளின் அடிநாதம் என்பதையும் அதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே கல்முனையில் மாவைக்கு நடந்த கரிபூசல் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த எதிர்ப்பு கல்முனையில் மட்டுமல்ல விரை வில் மட்டக்களப்பிலும் வாழைச்சேனையிலும் மூதூ ரிலும் திருமலையிலும் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பை நோக்கி வரும். அதை அவர்கள் எதிர் கொண்டே தீர வேண்டும்.

# மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி பதவி வகிக்கமுடியும்

## நாடு முழுவதும் தெளிவுபடுத்தல் கருத்தரங்குகள்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக பதவி வகிக்க முடியும் என்பதனை தெளிவு படுத்த நாடு முழுவதிலும் ஆளும கட்சி கருத்தரங்குகளை நடத்த உள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடாததும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறான ஓர் நிலைமையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக போட்டியிடுவது சட்டவிரோதமானது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ஜே.வி.பி கட்சி உள்ளிட்ட தரப்பினர் வாதிட்டு வருகின்றனர்.

எனினும், மூன்றாம் தவணைக்காக ஜனாதிபதி பதவி வகிப்பதில் சிக்கல் கிடையாது என ஆளும் கட்சி அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில் சிக்கல் கிடையாது என்பதனை தெளிவுபடுத்தும் வகையில் நாட்டின் பல பகுதிகளிலும் பிரசாரம் செய்யப்பட உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் இந்த விசேட கருத்தரங்குகள் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட உள்ளன.

# பத்திரிகை விற்பனை முகவர்கள் மாநாடு

(கொழும்பு)

பத்திரிகை விற்பனை முகவர்கள் சங்கத்தின் எட்டாவது வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் இலங்க மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நாடுமுழுவதிலுமுள்ள பத்திரிகை விற்பனை முகவர்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே இந்த சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 500இற்கும மேற்பட்ட பத்திரிகை விற்பனை முகவர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால உட்பட பிரமுகர்கள் பலர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு தோல்வி நிச்சயம்

## மாதுலுவே சோபித தேரர் ஆருடம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் தலைவர் மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கோட்டை சிறிநாக விஹாரையில் வைத்து நேற்று முன்தினம் சோபித தேரரை சந்தித்தனர். இதன்போது அவர் பொது வேட்பாளர் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

பொது வேட்பாளர் யார் என்பது மிக விரைவில் அறிவிக்கப்படும் ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உரிய வேட்பாளர் ஒருவரை களமிறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவினால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு இன்றி பொது வேட்பாளர் ஒருவரை போட்டியிடச் செய்வதில் பயனில்லை.

45 நாட்களுக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தி முடிக்க அரசாங்கம் முயற்சிப்பதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆளும் கட்சி ஏற்கனவே ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது.

எனவே விரைவில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பொது வேட்பாளர் குறித்து தீர்மானம் எடுக்க வேண்டுமென அவர் மீது தெரிவித்துள்ளார்.

## இராஜினாமா

பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவ திணைக்கள தலைவர் தனது தலைமை பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக கலைப் பீடத்திலுள்ள முகாமைத்துவ திணைக்கள மாணவர்கள் தொடர்ந்தும் தமக்கு முகாமைத்துவ பீடம் வேண்டுமென கோரி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மறியல் போராட்டம் கலஹா சந்தியில் விசேட மேடை அமைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்போது போராட்டத்தினை கைவிட்டால் உயர் கல்வி அமைச்சு தனியான பீடத்திற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் என உறுதி மொழி அளித்த போதும் மாணவர்கள் போராட்டத்தை கைவிடாததால் ஏற்பட்ட முறுகல் நிலையை தொடர்ந்து முகாமைத்துவ திணைக்கள தலைவர் தனது பதவியை துறந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# பதவி விலகினார் ரகுராம் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட வகுப்பு பகிஷ்கரிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

வளாக முதல்வர் கலாநிதி ரகுராம் தாமாக பதவி விலகுவதாக மாணவர்களிடம் உறுதியளித்ததை அடுத்தே, பகிஷ்கரிப்பை தற்காலிகமாக கைவிட தீர்மானித்ததாக திருகோணமலை வளாகத்தின் மாணவர் ஒன்றிய உப தலைவர் துரை ராஜசிங்கம் கபேஷ்காந் தெரிவித்துள்ளார்.


இதன் பிரகாரம் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனினும், திருகோணமலை வளாகத்தின் முன்னாள் முதல்வரான வைத்திய கலாநிதி வர்ணகுலேந்திரனை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு வளாகத்தின் அனைத்து பீட மாணவர்களும் வலியுறுத்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை வளாக மாணவர்களின் கோரிக்கை தொடர்பில் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணர் கோபிந்த ராஜாகருத்து வெளியிடுகையில் வளாக முதல்வர் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர்கல்வி அமைச்சு உட்பட பல உயர்மட்ட அதிகாரிகளுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது என்றார்.

திருகோணமலை வளாக முன்னாள் முதல்வர் வைத்திய கலாநிதி வர்ணகுலேந்திரன் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதவி விலக்கப்பட்டதை அடுத்து, கடந்த மூன்று மாதங்களாக வளாகத்தின் அனைத்து பீடங்களுக்குமான மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணைத் தாக்கிய விவகாரம் பொலிஸாரின் செயலை ஆதரிக்கவில்லை

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

இரத்தினபுரி பிரதேசத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பெணணொருவரை தாக்கியமை தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் இது தொடர்பில் சுமார் 15 பேரிடம் வாக்குமூலங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை தாக்குதலுக்குள்ளான பெண் இதுவரையில் இச்சம்பவம் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடுகளையும் பொலிஸில் செய்யவில்லை.

தாக்குதலுக்குள்ளான பெண்ணிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காக அவர் பல தடவை அழைக்கப்பட்ட போதிலும் அவர் வாக்குமூலத்தை இது வரை வழங்கவில்லை.

ஊடகங்களின் ஊடாக பெண்ணொருவரை பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் தாக்கும் காட்சியடங்கிய காணொளியொன்று வெளியிடப்பட்டது இது தொடர்பில் நாம் விசாரணைகளை முன்னெடுத்தோம் அதற்கமைய . இந்தச் சம்பவம் கடந்த மாதம் 6 ஆம் திகதி இரத்தினபுரி நகரில் மாலை 3 மணிக்கு இடம் பெற்றமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த பொலிஸ் சார்ஜன்ட ஒருவர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். இச்சம்பவத்தில் இடம் பெற்றுள்ள குற்றம் தொடர்பில் தனியாக ஒரு விசாரணையும் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் தனியாக ஒரு விசாரணையும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இதேவேளை, குறித்த பெண் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், அவர் அடிப்படை உரிமைமீறல் வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அறியக்கிடைத்தது.

எவ்வாறு இருந்தாலும் பொலிஸ் உத்தியோகஸ்தரின் செயற்பாட்டை பொலிஸ் தரப்பு ஒரு போதும் ஆதரிக்கவில்லை இச்சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# பால் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு காண வேண்டும்

## அமைச்சர் பசில்ராஜபக்ஷ



இலங்கையை பசும்பாலில் தன்னிறைவு அடையச் செய்யும் முயற்சிக்கு பாற்பண்ணையாளர்கள் வழங்கி வரும் ஒத்துழைப்பு அளப்பரியது எனவும் ராஜபக்ஷ குடும்பத்திற்கு பால் மாடுகளைத் தவிர வேறு சொத்துக்கள் கிடையாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை பால் பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நெஸ்ட்லே நிறுவனம் நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் பங்கேற்றிருந்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

என்னைப் போன்றே எனது தந்தையும் ஓர் பால் பண்ணையாளர்.


எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் தோட்டங்கள், ஹோட்டல்கள் மற்றும் கம்பனிகள் காணப்படுவதாக சிலர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

எவர் என்ன சொன்னாலும் எனக்கு சில பசு மாடுகள் மட்டுமே காணப்படுகின்றன.

நானும் எனது தந்தையும் உங்களைப் போன்றே பால் பண்ணையாளர்கள்.

எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் அந்த தோட்டம் இருக்கின்றது. ஹோட்டல் இருக்கின்றது. அந்த கம்பனி இருப்பதாக தெரிவித்தாலும் எங்களுக்கு அவ்வாறு சொத்துக்கள் இல்லை என்றார்.





கைதடிமேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நவராத்திரி விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் மாலைகட்டுதல் போட்டியில் பங்குபற்றியவர்களையும், மாதர் சங்க உறுப்பினர்களுக்கிடையே நடைபெற்ற கோலப்போட்டியில் முதலிடம் பெற்ற கோலத்தினையும் காணலாம். (51)

# எதிர்ப்பு அரசியல் ஊடாக எதையும் பெற முடியாது

## - வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு -



புத்தூர் கிழக்கு ஆவரங்கால் மேற்கு மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது குறித்து ஆராயும் கலந்துரையாடலொன்று வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மக்களின் அடிப்படைத தேவைகளையும், வாழ்வாதாரத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு எமது தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் இணக்க அரசியல் ஊடாகவே நாம் அரசாங்கத்திடம் இருந்து பெற்று மக்களாகிய உங்களிற்கு வழங்குகின்றோம் என்பதை நீங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்ப்பரசியல் ஊடாக மக்களின் அடிப்படைத் தேவைகளையோ, வாழ்வாதாரத் திட்டங்களையோ பெற்றுக் கொள்ள முடியாது பொய்த் தேசியம் ஊடாக உணர்ச்சி ஊட்டவும், இரத்தம் சிந்தவும், அழிவையுமே பெற்றுக்கொள்ள முடியும்.

தேர்தல் காலங்களில் உங்களிடம் வாக்குக்கேட்டு வருபவர்களிடம் கடந்த தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை ஏன் என்னும் நீங்கள் நிறைவேற்றவில்லை?என்று கேளுங்கள் எனக் கூறிய அவர் மக்களைச் சந்திப்பதற்கு பயந்தவர்கள எவ்வாறு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள்? என்ற கேள்வியினையும் எழுப்பியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் மக்களின் அடிப்படைத் தேவைகளான வீட்டுத்திட்டம், மலசலகூடம், வாழ்வாதாரத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி வங்கி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# புதைக்கப்பட்ட சடலத்தை தோண்டியெடுக்க உத்தரவு

(மன்னார்)

மன்னார் கடற்கரைப் பகுதியில் வெவ்வேறு தினங்களில் கரையொதுங்கிய இரு சடலங்களில் ஒன்று தவறுதலாக பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படாமல் அரச செலவில் புதைக்கப்பட்டமை குறித்து மன்னார் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து அந்தச் சடலத்தை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ளும்படி மன்னார் நீதிமன்று உத்தரவிடடது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது- வங்காலை கடற்படை முகாமிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் சவுத்பார் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 03ஆம் திகதி அன்று சடலம் ஒன்று கரையொதுங்கியிருந்தது. அந்தச் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட் டது. மரண விசாரணை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரி தே.பி.சிந்தாத்துரை சடலத்தை எவரும் அடையாளம் காண்பிக்காததால் மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று அடையாளம் காண்பதற்காக இரு வாரங்கள் அங்கு பாதுகாப்பாக வைக்கும் படியும் பின் பிரேத பரிசோதனை மேற்கொண்டபின் அரச செலவில் அடக்கம் செய்யும்படியும் உத்தரவிட்டிருந்தார். அதே போன்று கடந்த 15.9.2014 அன்றும் மன்னார் சவுத்பார் கடற்கரைப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் இன்னொரு சடலமும் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தச் சடலத்தையும் அடையாளம் காணுமுகமாக இரு வாரங்களுக்கு அங்கு பாதுகாப்பாக வைக்கும் படியும பின் மரண பரிசோதனை மேற்கொண்டபின் அரச செலவில் அடக்கம் செய்யும்படியும் மன்னார் மாவட்ட மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் முதலில் மீட்கப்பட்ட சடலத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்டபின் 24.9.2014 அன்று அரச செலவில் அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தச்சடலத்தை அடக்கம் செய்வதற்கு பதிலாக இரண்டாவது சடலம் தவறுதலாக அடக்கம் செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது 29.9.2014 அன்று இரண்டாவது சடலத்தை பிரேத பரி சோதனை செய்து அரச செலவில் புதைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதே இச்சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த விடயம் மன்னார் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து மரண பரிசோதனை மேற்கொள்ளாமல் அடக்கம் செய்யப்பட்ட சடலத்தை இன்று சனிக்கிழமை மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் மீண்டும் தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ளும்ப்டி மன்னார் நீதிபதி ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்.

# நாகவரத நாராயணருக்கு ஏகாதசி விரதம் இன்று

(அளவெட்டி)

அளவெட்டி - நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை ஏகாதசிதீர்த்தம் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 7.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகி 9.00 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம் பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று அதனையடுத்து ஸ்ரீ நாகவரதநாராயணர் பூமாதேவி ஸ்ரீ தேவி சகிதம் அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பர்.

மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வரபூசை நிகழும். எனவே பக்தர்கள் அனைவரும் இந்த ஏகாதசிவிரதத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

# முரசின் இன்றைய பலன்



(04.10.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 18 ஆம் திகதி.
மரணயோகம் / ஏகாதசித்திதி.
திருவோண நட்சத்திரம் பி.பகல். 04.28 வரை பின் அவிட்டம்.
இராகு காலம் 09.02 - 10.32 வரை. சுபநேரம் 03.02 - 04.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நீண்டகாலமாக வசித்த போதிலும் நுழைவிசைவு (வீசா) கிடைக்கப்பெறாமையால் துயரடைதல். பிள்ளைகளின் உயர்ச்சி கேட்டு பெருமையடைதல் சுவீய் அதிர்ஷ்டமுண்டு. |
| ரிஷபம் | அறப்பொருட்களைக் கொள்வனவு செய்து இலாபமீட்டுதல். புதிய முயற்சி தொடங்க வியாழசுகம் கேடாக இருப்பதினால் கைவிட முயலுதல். |
| மிதுனம் | விளையாட்டில் கவனம் செலுத்தும் பிள்ளையை கல்விப் புலத்திற்கு திசை மாற்றிவிடல். காலாவதியான பொருட்களைத் தருவோர் பற்றி விழிப்பாக இருங்கள். |
| கடகம் | எதிர்பாராது தாயாரின் தேகநலம் கெட்டதை எண்ணித் துயரடைதல். சத்திரசிகிச்சை மேற்கொள்ள நாட்குறித்தும அச்சத்தினால் சமூகமளிக்காமை. |
| சிம்மம் | போட்டியில் மத்தியஸ்தர் பக்கச்சார்பாக இருப்பதைக் கண்டு களேபரம் ஏற்படல். கல்விப்பெறுபேற்றில் சாதனை புரிவேனே என்று சூளுரைத்த மகளை எண்ணிப் பெருமைப்படல். |
| கன்னி | நெறிகெட்டுத்திரியும் சகோதரரினால் குடும்பத்திற்கு தலைகுனிவு ஏற்படல். ஆராய்வில்லாது எழுந்த மானத்தில் வெளிவந்த செய்தியால் மனவேதனைப்படல். |
| துலாம் | கண்டிப்பதைக் கைவிட்டு சிநேகபூர்வமாக நடந்து கொள்வதினால் முரண்பாடு விலகல். |
| விருச்சிகம் | குடும்பத்தில் இடம்பெற்ற ஒவ்வாத விடயத்தை எண்ணித் துயரப்படல். பழையபகைமை மீண்டும் முளைவிட ஆரம்பித்ததனால் பீதியும் அச்சமும் தக்கவைத்தல். |
| தனுசு | திட்டமிட்டவை கனகச்சிதமாக இருந்ததினால் பணியின் இலக்கு வெற்றியைத்தரல். அடுத்தவர் யோசனையின் நன்மை தீமைகளை ஆராய்ந்து செயற்படுதல் நலம் தரும். |
| மகரம் | திறமையைக்கண்டு மறைமுக எதிர்ப்புக்கள் எதிராகச் செயற்பட ஆரம்பிக்கும். நெருக்கடியாக வேளையில் நண்பர் உதவிக்கரம் நீட்ட முன்வருதல். |
| கும்பம் | தொழில் சம்பந்தமாக அலைச்சலும் அகால போஜனமும ஏற்படலாம். மேலதிகாரிகளை அனுசரித்துப் போவதினால பதவி உயர்வுக்குச் சிபார்சு ஏற்படல். |
| மீனம் | நிறை குறைவாக விற்ற நிலையைக் கண்டு வாடிக்கையாளருடன் முரண்படுதல். மனநலம் பாதிக்கப்பட்ட பிள்ளையைக் குணப்படுத்த தெய்வதலத்தை நாடுதல். |

# வெற்றிக்களிப்பில் இந்தியா கபடியில் 2 தங்கங்கள்





(இன்ச்சான)

ஆசிய விளையாட்டு கபடி போட்டியில் இந்திய ஆண்கள் அணி, தொடர்ந்து ஏழாவது முறையாக தங்கம் வென்று அசத்தியது. அத்துடன் மகளிர் அணியும் தங்கத்தை சுவீகரித்துக் கொண்டது. நேற்று நடந்த இதயத்துடிப்பை எகிறச் செய்த இறுதிப்போட்டியில் கடைசி நிமிடத்தில் எழுச்சி பெற்ற இந்திய அணி, ஈரானை வீழ்த்தியது.

தென் கொரியாவின் இன்ச் சான்நகரில் 17 ஆவது ஆசிய விளையாட்டு நடைபெற்றுவருகிறது. இதன் ஆண்கள் கபடி இறுதிப் போட்டியில் இந்தியா, ஈரான் அணிகள் மோதின.

கடந்த 2010 குவாங்சு ஆசிய விளையாட்டு இறுதிப்போட்டியில் இந்திய அணியிடம் 3720 என, ஈரான் தோற்றிருந்தது. இதனால் இம்முறை ஈரான் அணியினர் கடும் சவால் கொடுக்கத் தொடங்கினர்.

மாறாக, இந்திய வீரர்கள் தொடக்கத்தில் இருந்தே தவறு செய்யத் தொடங்கினர். இதனால், போட்டி தொடங்கிய 9 ஆவது நிமிடத்தில் இந்திய அணி 713 என, பின்தங்கியது.

ஆறு முறை சம்பியன் அணியான இந்தியா மீண்டும் சொதப்ப, வித்தியாசம் 717 என, அதிகரித்தது. முதல் பாதி முடிவில் இந்திய அணி 1321 என்ற கணக்கில் இந்திய அணி பின் தங்கி இருந்தது. இரண்டாவது பாதிதொடங்கியதும், இந்திய வீரர்கள் சற்று சுதாரித்துக் கொண்டனர். இதனால், 2121 என, புள்ளி சமனிலை அடைந்தது.

தொடர்ந்து மிரட்டிய இந்திய அணி போட்டியின் 17ஆவது நிமிடத்தில் 2524 என, முன்னிலை பெறத்தொடங்கியது. கடைசி நிமிடத்தில் ஈரான் வீரரை மடக்க, 2725 என்றபுள்ளிக் கணக்கில் இந்திய அணி "திரில" வெற்றி பெற்று, தங்கப் பதக்கத்தை தட்டிச்சென்றது.

கடந்த 1990, பீஜிங் ஆசிய விளையாட்டில் கபடி அறிமுகம் ஆனது. அன்று முதல் 1994 (ஹிரோஷிமா), 1998 (பாங்காக்), 2002 (புசான்), 2006 (தோகா), 2010 (குவாங்சு) என, தொடர்ந்து ஆறு முறை இந்திய அணி தங்கம் வென்றிருந்தது.

இன்று மீண்டும் வென்றதன் மூலம், ஆசிய விளையாட்டு கபடிப் போட்டியில் இந்திய அணி தொடர்ந்து ஏழாவது முறையாக, தங்கம் வென்று அசத்தியது. இதே வேளை ஆசிய விளையாட்டு மகளிர் கபடிப் போட்டியிலும் இந்திய அணி தங்கப் பதக்கம் வென்றது. இறுதிப் போட்டியில் ஈரானை 31-21 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி இந்திய மகளிர் அணி அபார வெற்றி பெற்றது. ஆசிய விளையாட்டில் மகளிர் கபடிப் போட்டி 2010 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆசிய விளையாட்டில் இந்தியாவுக்கு 10 ஆவது தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஹோலி தகுதியானவர்

டெஸ்ட் அணித்தலைவர் பதவிக்கு டோனியை விட கோஹ்லி சரியானவராக இருப்பார் என முன்னாள் இந்திய அணித தலைவர் அசாருதீன் கூறியுள்ளார்.

சமீபத்தில் நடந்து முடிந்த இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் டோனி தலைமையிலான இந்திய அணி தொடர் தோல்விகளை சந்தித்து மோசமான முறையில் தொடரை பறிகொடுத்தது.

இதைத் தொடர்ந்து அணித் தலைவர் டோனிக்கு பலத்த எதிர்ப்பு வந்தது. அவர் டெஸ்ட் தொடருக்கு அணித்தலைவராக இருப்பது சரியல்ல என்ற பரவலான கருத்து வெளிவர ஆரம்பித்தது.

இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் அசாருதீன் இதுபற்றிக் கூறுகையில், சிறந்த முறையில் விளையாடினால் மட்டுமே நீண்ட காலத்திற்கு அணித்தலைவராக இருக்க முடியும் இல்லாவிட்டால் அணித்தலைவர பதவியில் நீடிப்பது என்பது கடினமான விடயம்.

இங்கிலாந்து டெஸ்ட் தொடருககு பிறகு இந்திய டெஸ்ட் அணியில் மாற்றம் தேவை. நான் தெரிவாளராக இருந்தால் கண்டிப்பாக டோனிக்கு பதிலாக விராட் கோஹ்லியை டெஸ்ட் போட்டிகளின் அணித் தலைவராக நியமிப்பேன்.

இந்திய கிரிக்கெட் வாரியம் இதில் தலையிட்டு அணித் தலைவர் பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்க வேண்டும். யாரும் சிறந்த அணித்தலைவராக அணிக்கு வந்து விடவில்லை. மற்றவர்களுக்கு வாய்ப்பளித்தால் தான் சிறந்த ஒரு அணி தலைவரை அடையாளம் காண முடியும் என்று கூறியுள்ளார்.

## 16 ஆண்டுகளின் பின் சாதனை

ஆசிய விளையாட்டு ஹொக்கி போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி 16 ஆண்டுக்கு பின்னர் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளது இந்திய ஆடவர் அணி.

ஆசிய விளையாட்டில் ஆடவருக்கான ஹொக்கி போட்டியில் தங்கப் பதக்கத்திற்கான இறுதி ஆட்டத்தில் இந்தியாவும், நடப்பு சம்பியன் பாகிஸ்தானும் பலப்பரீட்சையில் இறங்கின.

இரு பரமஎதிரிகள் மோதுவதால் இரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இந்தப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தானை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. பெனால்டி ஷட் அவுட் முறையில் 4-3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை இந்தியா வென்றது. ஏற்கனவே லீக்கில் 12 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானிடம் தோல்வி அடைந்த சர்தார்சிங் தலைமையிலான இந்திய அணி அதற்கு பதிலடி கொடுத்துள்ளது. ஆசிய விளையாட்டில் 1958 ஆம் ஆண்டு அறிமுகம் ஆன ஹொக்கியில் இந்திய அணி 1966 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் தங்கம் வென்றுள்ளது.

தற்போது 16 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தங்கம் வெல்வதற்கு கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை இந்தியா பயன்படுத்திக் கொண்டது. 8 முறை சம்பியனான பாகிஸ்தான் அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி நேரடியாக 2016 ஆம் ஆண்டு நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிக்குத்தகுதி பெற்றுள்ளது.

## அணிகள் தெரிவு

சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கொத்தா நைட் ரைடேர்ஸ் அணிகள் சம்பியன் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. அரை இறுதிப் போட்டியில் கொல்கொத்தா நைட் ரைடேர்ஸ் அணி, ஹோர்பார்ட் கியுரிகன்ஸ் அணியை வெற்றி பெற்ற அதேவேளை சென்னை சுப்பர் கிங்ஸ் அணியானது கிங்ஸ் 11 பஞ்சாப் அணியை வென்றுள்ளது.

கொல்கொத்தா நைட் ரைடேர்ஸ் அணிக்கும், ஹோர்பார்ட் கியுரிகன்டு அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பாடிய ஹோர்பார்ட் கியுரிகன்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சொய்ப் மலிக் 60 ஓட்டங்களையும், பென் ட்ங் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பாடிய கொல்கொத்தா நைட் ரைடேர்ஸ் அணி 19.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றது.

சென்னை சுப்பர் கிங்ஸ், கிங்ஸ் 11 பஞ்சாப் அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலில் துடுப்பாடிய சென்னை சுப்பர்கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுவைன் பிராவோ 67 ஓட்டங்களையும், பப் டு பிலேசிஸ் 46 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிரவிந்தர் அவ்னா 4 விக்கெட்டுகளையும், அக்ஸார் பட்டேல 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பாடிய கிங்ஸ் 11 பஞ்சாப் அணி 18.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் டேவிட் மில்லர் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஆஷிஸ் நெஹ்ரா, மோகித் ஷர்மா, பவான் நேஜி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

## ஆசிய விளையாட்டுவிழா - 2014

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 142 | 101 | 79 | 322 |
| தென் கொரியா | 73 | 66 | 75 | 214 |
| ஜப்பான் | 46 | 70 | 69 | 185 |
| கஜகஸ்தான் | 20 | 19 | 32 | 71 |
| ஈரான் | 18 | 13 | 17 | 48 |
| இந்தியா | 11 | 9 | 37 | 57 |
| வடகொரியா | 10 | 11 | 13 | 34 |
| கத்தார் | 10 | 0 | 4 | 14 |
| உஸ்பெகிஸ்தான் | 9 | 11 | 20 | 40 |
| தாய்லாந்து | 9 | 7 | 27 | 43 |
| சீன தைபே | 8 | 17 | 18 | 43 |
| பஹ்ரைன் | 8 | 6 | 4 | 18 |
| ஹாங்காங் | 6 | 11 | 23 | 40 |
| சிங்கப்பூர் | 5 | 6 | 11 | 22 |
| மலேஷியா | 4 | 14 | 11 | 29 |
| இந்தோனேசியா | 4 | 5 | 11 | 20 |
| மங்கோலியா | 4 | 4 | 11 | 19 |
| சவுதி அரேபியா | 3 | 2 | 1 | 6 |
| குவைத் | 2 | 4 | 3 | 9 |

# பாலகிருஷ்ணன் நினைவு மென்பந்து கிரிக்கெட் வெண்கலச்செட்டிகுள பிரதேச செயலகம் சம்பியன்



(வவுனியா)

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் உடற்கல்வி அலகினால் நடாத்தப்பட்ட அமரர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் நினைவு மென்பந்து கிரிக்கெட் கிண்ணத்தை வவுனியா வெண் கலச்செட்டிக்குள பிரதேச செயலக அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடர் கடந்த 27,28 ஆம் திகதிகளில் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 16 அரச திணைக்கள அணிகள் பங்கு கொண்டன. அணிக்கு ஆறு பேர் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் வவுனியா போக்குவரத்துச் சபை அணியும் வவுனியா வெண்கலச்செட்டிக்குள பிரதேச செயலக அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வெண்கலச்செட்டிக்குள பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 54 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வவுனியா போக்குவரத்துச் சபை அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. 12 ஓட்டங்களால் வெற்றிபெற்ற வெண் கலச்செட்டிக்குள பிரதேச செயலக அணி நா. பாலகிருஷ்ணன் நினைவுக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், சிறந்த சகலதுறை வீரராகவும் வெண் கலச்செட்டிக்குள பிரதேச செயலக அணியைச் சேர்ந்த எஸ்.ஏ. சதீஸ்குமார், சிறந்த பந்துவீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த எம்.ஏ. அக்ரம், சிறந்த களத் தடுப்பாளராக வவுனியா போக்குவரத்து சபை அணி யைச் சேர்ந்த ரீ. வசீதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விருது கள் வழங்கப்பட்டது. இப்போட்டித் தொடரில் மூன்றாமிடத்தை வவுனியா அஞ்சல் திணைக்கள அணி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12)

# கரம்; யாழ். பல்கலை சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கரம் அணியினரால் நடாத்தப்பட்ட அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான கரம் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி சம்பியனாகியது.

அழைக்கப்பட்ட ஆறு அணிகள் பங்குபற்றிய இப்போட்டி கடந்த 29ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக உள்ளக அரங்கில் நடைபெற்றது. இதில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் அணிகள் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் பரியோவான்கல்லூரி அணியும் மோதிக்கொண்டன. முதல் மூன்று ஒற்றையர் ஆட்டத்திலும் யாழ்.பல்கலைக்கழக அணியினர் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டனர்.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில், காமாட்சி அணியும் கொக்குவில் கே.சி.சி.சி அணியும் மோதிக் கொண்டனர். இதில் முதல் மூன்று சுற்றுகளையும் வென்ற கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

# கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்

(யாழ்ப்பாணம்)

நாம் நண்பர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் சம்பியன் பட்டத்தை கரவெட்டி ஞானம்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 27 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அணிக்கு ஐந்து பேர்களைக் கொண்டதாக இப்போட்டி நடாத்தப்பட்டது.

இதில் காலிறுதிப் போட்டியில் முத்துத்தம்பி அணியையும், அரையிறுதியில் ரெயின்போ அணியையும் வீழ்த்திய கரவெட்டி ஞானம்ஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டியில் கொக்குவில் விரம்படி அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்.

# பளுதூக்கலில் வெள்ளி



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி அண்மையில் ராஜகிரிய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மாணவி விஜயஜீவன் சுசந்திகா 17 வயதுப் பிரிவில் 53 கிலோ கிராம் எடைப் பிரிவில் வெள்ளிப் பக்கத்தை வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார். பதக்கம் வென்ற சுசந்திகாவிற்கு பாடசாலைச் சமூகம் உட்பட பல தரப்பில் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# புத்தளத்தில் அசத்தும் யாழ். முஸ்லிம் அணி



(புத்தளம்)

புத்தளத்தில் நடைபெற்ற கால்ப்பந்தாட்ட போட்டியில் யாழ். முஸ்லிம் யுனைட்டட் அணி மீண்டும் அதிரடியான தாக்குதலில் புத்தளம் விம்பிள்டன் அணி நிலை குலைந்து போனது.

இந்த இரண்டாவது வெற்றியின் மூலம் யாழ். முஸ்லிம் யுனைட்டட் அணி 06 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கின்றது.

இந்த ஆட்டம் கடந்த சனிக்கிழமை மாலை புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

புத்தளம் கால்ப்பந்தாட்ட லீக் நடாத்தி வரும் புள்ளிகள் அடிப்படையிலான கால்ப்பந்தாட்ட தொடரிலேயே இவ்விரு அணிகளும் நீண்ட காலத்துக்கு பின் சந்தித்து கொண்டன.

முதல் பாதியில் இரு அணிகளும் கோல் பெறாவிட்டாலும் இரண்டாவது பாதியில் போட்டி நிறைவு பெறும் வேளை யாழ். முஸ்லிம் யுனைட்டட் அணியினரால் தொடர்ந்து 03 கோல்கள் பெறப்பட்டதன் மூலம் அவ் அணி 03 கோல்களினால் வெற்றி பெற்றது.

இதில் எம்.இந்திஸார் இரு கோல்களையும், எம்.நிப்பு ஒரு கோலியையும் பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு வித்திட்டமை குறிப்பிடத்தக்கது.



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண விளையாட்டுப் போட்டியில் கிண்ணம் வென்ற யாழ். மாவட்ட அணியின் கிண்ணத்தை மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ், அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கடந்த புதன்கிழமை கையளித்தார். இந்நிகழ்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# ரோகித் சர்மா ஆடுவதில் சந்தேகம்

(புதுடில்லி)

மேற்கிந்தியதீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரில் ரோகித் சர்மா பங்கேற்க முடியாத நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கிந்தியத்தீவுகள், இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி கொச்சில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான அணியில் ரோகித் சர்மா இடம்பிடிக்கக்கூடிய வாய்ப்பு மிகக்குறைவாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் தொடரின் போது கைவிரலில் காயமடைந்த ரோகித் சர்மா அதற்கு சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக சம்பியன் லீக் ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரிலிருந்து விலக்கிக் கொண்டார். இந் நிலையில் காயம் இன்னமும் பூரணமாக குணமடையாத நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரிலிருந்தும் அவர் விலகிக் கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




இதேவேளை, இப்போட்டிக்கான இந்திய அணி விரைவில் அறிவிக்கப்படும் என இந்திய கிரிக்கெட் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் போட்டியிடும் இந்தியாவும், சீனாவும்

**- வே. அர்சுணன் -**





இலங்கையில் சீனாவும் இந்தியாவும் என்றும் இல்லாதவாறு தமது போட்டி முனைப்புகளை தீவிரப்படுத்தியுள்ளன. அது மட்டுமன்றி ஜப்பான் உள்ளிட்ட வேறு சில நாடுகளும் இலங்கை மீது தமது கவனத்தை திருப்பியுள்ளன.

பொருளாதார ரீதியான உதவிகள், இராஜதந்திர ரீதியான உதவிகள் என இவர்களின் உதவிக்கான வலையமைப்புக்கள் விரிந்து வலுவடைந்து வருகின்ற போதிலும் தென்னாசிய வட்டகைக்குள் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்துவதே இவர்களின் பிரதான இலக்காக உள்ளது. இதற்கு இலங்கையை தளமாக பயன்படுத்த இவை முயற்சித்து வருகின்றன.

இலங்கையை பொறுத்தவரை இந்தியாவையும் சீனாவையும் ஏனைய தென்னாசிய நாடுகளையும் அரவணைத்து செல்கின்ற ஒரு மனோபாவத்தை கடைப்பிடித்து வருகின்றது. சீனாவின் கடற்பாதை திட்டத்தை வரவேற்றுள்ளதாக இலங்கை ஜனாதிபதி வெளிப்படையாகவே தெரிவித்தும் உள்ளார்.

சீன ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டுவரும் 21ஆம் நூற்றாண்டின் புதிய கடலோர சில்க் பாதை திட்டத்தை பாராட்டியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத்திட்டம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானது என்று குறிப்பிட்டுள்ளதோடு சீனாவின் இந்தத் திட்டத்தில் இலங்கை இணைந்துகொள்ளும் என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியாக நான் பதவியேற்ற பின்னர் ஏழு தடவைகள் சீன ஜனாதிபதியை சந்தித்துள்ளேன். சீனாவுடன் வர்த்தகத்தையும் முதலீட்டையும் அதிகரிக்க இலங்கை விரும்புகின்றது. 2009 இல் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் இரு நாடுகளும் புனர்நிர்மாணம் மற்றும் ஏனைய துறைகளில் இணைந்துள்ளன எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை கடந்த 7ஆம் திகதி குறுகியதொரு பயணமாக கொழும்பு வந்திருந்த ஜப்பானிய பிரதமர் சின்ஷோ அபே இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அடித்தளமிட்டு விட்டுச் சென்றிருக்கிறார். ஜப்பானிய பிரதமர் சின்ஷோ அபே பங்களாதேஷுக்கும் இலங்கைக்கும் மேற்கொண்ட பயணத்தின் முழுநோக்கமுமே சீன ஆதிக்கம் தெற்காசியாவில் விரிவடைவதை தடுப்பதேயாகும்.

சீனாவும் ஜப்பானும் இப்போதும் ஏட்டிக்குப் போட்டியான நாடுகளாக இருந்து வருகின்றன. கடல்வழிப் பட்டுப்பாதைத் திட்டத்தில் இலங்கை, மாலைதீவு போன்ற நாடுகளையும் இணைத்துக்கொள்ளும் முனைப்பில் சீனா இருக்கிறது. ஏற்கனவே அம்பாந்தோட்டை கொழும்புத் துறைமுக அபிவிருத்தித் திட்டங்களில் சீனா முதலீடு செய்துள்ளதால் ஜப்பானுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கிலிருந்து எரிபொருள் விநியோகத்துக்கு எந்த வகையிலும் தடைகள் ஏற்படாத வகையில் பாதுகாப்பான கடற்பாதையை உறுதிப்படுத்த முனைகிறது ஜப்பான். இதற்காகவே ஜப்பானிய பிரதமர் முக்கியமாக கொழும்புக்கு வந்திருந்தார்.

ஜப்பானிய பிரதமர் சின்ஷோஅபே நீண்ட காலத்திற்கு பின்னர் அந்த நாட்டில் உறுதியானதொரு தலைவராக உருவெடுத்துள்ளார். நாட்டின் பாதுகாப்புக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். சீனாவுக்குச் சவால்விடும் வகையிலான துணிச்சல்மிக்க நடவடிக்கைகளையும் எடுக்கத் தொடங்கியுள்ளார்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பினர் பதவிக்கு 2015 ஆம் ஆண்டு நடக்கவுள்ள தேர்தலில் ஆசியப் பிரிவில் பங்களாதேஷும் ஜப்பானும் போட்டியில் நின்றன. தனது பங்களாதேஷ் பயணத்தின்போது உதவிகளை அள்ளி வழங்கி அந்த நாட்டுப் பிரதமர் ஷேய்க் ஹசீனாவுடன் நடத்திய பேச்சுக்களின் மூலம் பங்களாதேஷைப் போட்டியிலிருந்து விலக வைத்துவிட்டார்.

அதுபோலவே இலங்கையுடனும் கடல் சார் பாதுகாப்புத் திட்டத்தில் உடன்பாட்டை ஏற்படுத்தியிருப்பது ஜப்பானிய பிரதமரின் பயணத்தினால் விளைந்த முக்கியமானதொரு நன்மையாகும்.

ஜப்பானிடமிருந்து அதிகளவு நலன்களை பெற்றுக்கொண்ட நாடு இலங்கை. இரண்டாம் உலகப்போரில் படுதோல்வியுற்ற ஜப்பான் சரணாகதியடைந்த பின்னர் எங்கெங்கு ஜப்பான் அழிவுகளை ஏற்படுத்தியதோ அந்த நாடுகளுக்கெல்லாம் நட்டஈடு வழங்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டது. அதனால் இலங்கைக்கும் நட்டஈடு வழங்கவேண்டிய நிலையொன்று ஏற்பட்டது. ஆனால் 1951ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜப்பானிடமிருந்து நட்டஈடு தேவையில்லை என்று அறிவித்தார். அது நொந்துபோயிருந்த ஜப்பானுக்கு பெரியதொரு விடயமாக இருந்தது.

அதற்கு பின்னர்தான் ஜப்பானிய-இலங்கை உறவுகள் வளரத் தொடங்கின. கட்டுநாயக்க விமான நிலையக் கட்டுமானம் உள்ளிட்ட பாரிய திட்டங்களை ஜப்பான் செய்து கொடுத்தது. சீனா இந்தியா போன்ற நாடுகள் இலங்கைக்கு அண்மைக் காலமாகவே உதவி வழங்கி வருகின்றன. ஆனால் பல ஆண்டுகளாக இலங்கைக்கு உதவிகள் கடன்களை வழங்குவதில் ஜப்பானே முன்னிலையிலிருந்து வந்தது.

நல்லிணக்க முயற்சிகளில் ஆர்வம் காட்டுமாறு அழுத்தம் கொடுத்தாலும் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிராக ஜப்பான் ஒருபோதும் செயற்படவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் ஜப்பான் நடுநிலை வகித்தது. சர்வதேச உறவுகளில் நெருக்கடிகளை ஏற்படுத்தாத பாதுகாப்பான நண்பனாகவே ஜப்பான் இருக்கிறது.

ஆனால் சீனாவோ, இலங்கைக்கு அழுத்தம் கொடுக்காத நண்பனாகவும் சர்வதேச அளவில் ஆதரவு கொடுக்கும் தோழனாகவும் இருந்து வருகிறது. இந்த சீன இலங்கை நட்புறவை மேற்குலகமும் சரி ஜப்பானும் சரி இந்தியாவும் சரி விரும்பவில்லை. இது சீனாவுடனான உறவுகளை ஒரு கட்டத்துக்கு மேல் முன்னகர்த்துவதற்கு இலங்கைக்கு தடையாக இருக்கிறது.

இந்தியாவின் உதவிகளையும் சீனாவின் உதவிகளையும் சமநேரத்தில் பெற்று சாதித்து வரும் இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறை இன்றைய உலக ஒழுங்கின் நியதியையே மாற்றும் அளவிற்கு இருக்கின்ற அதேசமயம் இந்தியாவும் சீனாவும் இலங்கை தொடர்பிலான தமது போட்டி மனோபாவத்தை கைவிடும் என்பதாகவும் இல்லை.

---

# கே.வி. மகாதேவன்

## 2

**- பி.ஜி.எஸ்.மணியன் -**



ஏ.வி.எம் தயாரிப்பான "நந்தகுமார்" - படம் பலருக்கு முதல் வாய்ப்பைக் கொடுத்த படம்.

பாடகர் - நடிகர் டி.ஆர். மகாலிங்கம் கதாநாயகனாக அறிமுகமான படம்.

நகைச்சுவை நடிகர் டி.ஆர். ராமச்சந்திரனுக்கும் அதுதான் முதல் படம்.

எஸ்.வி. வெங்கட்ராமனுக்கும் இசை அமைக்கும் வாய்ப்பை முதல் முதலாக கொடுத்த படம்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் சினிமாவில் முதல் முறையாக பின்னணி பாடும் முறையை அறிமுகப் படுத்திய படமும் இதுதான்.

இந்தப் படத்தில் பாடிய லலிதா வெங்கட்ராமன் என்பவர்தான் தமிழ்ச்சினிமாவின் முதல் பின்னணிப் பாடகி.

இப்படி பலருக்கு முதல் வாய்ப்புகளைக் கொடுத்த "நந்தகுமார்" படம்தான் கே.வி. மகாதேவனை எஸ்.வி. வெங்கட்ராமன் அவர்களிடம் உதவியாளராக பணிபுரியும் முதல் வாய்ப்பை கொடுத்து திரைப் படத்துறையில் முதல் முதலாக காலெடுத்து வைக்கச் செய்தது.

அதுவரை மேடைகளில் பாடிக்கொண்டும் வாசித்துக்கொண்டும் இருந்தது வேறு. சினிமாவில் வாசிப்பது என்பது வேறு.

சினிமாவில் சங்கீதம் நேரத்துக்குள் அடங்கவேண்டும். காட்டாற்று வெள்ளமான கர்நாடக சங்கீதத்தை மூன்று நிமிடப் பாடலுக்குள் அடைக்க வேண்டும்.

அதிலும் எக்கச்சக்கமான பாடல்கள் இடம் பெற்ற அந்த நாளைய படங்களில் "செவிக்கினிய நாற்பத்திரண்டு பாடல்கள் நிறைந்த படம்" என்றுதான் விளம்பரப்படுத்துவார்கள்.

அவற்றில் நான்கு அல்லது ஐந்து பாடல்கள் தான் முழுமையான பாடல்கள்.

மற்றதெல்லாம் விருத்தங்கள். பாடல்களுக்கு மெட்டமைப்பதுகூட சுலபம். ஆனால் இந்த விருத்த வகை இருக்கிறதே. அவற்றுக்கு மெட்டமைப்பது என்பது கடினமான விஷயம்.

ஒன்றரை நிமிட நேரத்துக்கு இடம் பெறும் ஒரு விருத்தத்துக்குள் ராகத்தின் முழு வடிவத்தையும் அந்த நான்கு வரிக்குள் அடக்கிக் காட்டவேண்டும்.

இதெல்லாம் நாடக மேடையில் பழம் தின்று கொட்டை போட்டவர்களுக்கே கை வந்த கலை.



எஸ்.வி. வெங்கட்ராமன்

அந்தக் கலையில் கைதேர்ந்தவராக இருந்தார் எஸ்.வி. வெங்கட்ராமன். அவருடன் இணைந்து பணியாற்றியபோது இந்த வித்தையின் ஆரம்பப் பாடத்தை நன்றாகக் கற்றுக்கொண்டார் கே.வி. மகாதேவன்.

பின்னாளில் தனித்து இசை அமைத்த போது மகாதேவன் அமைத்த விருத்தங்கள் கேட்க ரம்மியமாகவும், மீண்டும் கேட்கத் தூண்டும் வகையிலும் அமைந்தன.

"திருவிளையாடல், திருவருட்செல்வர், கந்தன் கருணை, துணைவன்" ஆகிய படங்களில் இடம் பெற்ற விருத்தங்கள் அவருக்கு பெரும் புகழை வாங்கிக் கொடுத்தன.

ஆனால். நந்தகுமார் படத்தின் தோல்வியும், அடுத்து வந்த படங்களின் தோல்விகளும் தொடர்ந்த போது ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளினால் ஏ.வி.எம். நிறுவனத்தை விட்டு எஸ்.வி. வெங்கட்ராமன் வெளியேறினார்.

அந்த நேரத்தில் கே.வி. மகாதேவனும் வெளியேறி டி.ஓ. சுப்பாராவ் என்ற இசை அமைப்பாளரிடம் சேர்ந்து அங்கு கொஞ்சக்காலம் இருந்த பிறகு, டி.ஏ. கல்யாணத்திடம் வந்து சேர்ந்தார்.

டி.ஏ. கல்யாணம் - தமிழ்ச்சினிமாவில் மறக்கப்பட்ட - மறைக்கப்பட்ட திறமைசாலிகளில் ஒருவர். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில் இசை அமைப்பாளராக அவர் இருந்தார். மிகுந்த ஞானஸ்தர்.

அவரது காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களில் இசை அமைப்பு என்பது ஒரு தனிப் பிரிவாக இல்லை. பாடல்களுக்கு மட்டுமே இசை அமைப்பாளர் என்பவர் தேவைப்பட்டார். மற்றபடி பின்னணி இசைச் சேர்க்கைக்கு ஆர்கெஸ்ட்ரா என்று ஒன்று தனியாக இயங்கி வந்தது.

படத்தில் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த அளவுக்கு இசை அமைப்பாளர்களுக்கு தகுந்த முக்கியத்துவமோ விளம்பரமோ கொடுக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒரு விஷயம் தான்.

இசை அமைப்பாளரின் பெயர் கூட டைட்டிலில் இடம் பெறாத படங்கள் கூட உண்டு.

மூன்று தீபாவளிகளைக் கடந்து வெற்றிகரமாக ஓடிய "ஹரிதாஸ்" படத்தின் டைட்டிலில் கூட இசை அமைப்பாளர் ஜி. ராமனாதனின் பெயர் இருட்டடிப்பு செய்யப்பட்டதே?

அந்தவகையில் டி.ஏ. கல்யாணம் அவர்களும் மறைக்கப்பட்ட ஒரு இசை அமைப்பாளராகவே அடையாளம் காணப்படுகிறார்.

அதனால் என்ன?

கே.வி. மகாதேவன் என்ற இருபத்து நான்கு வயது இளைஞன் பட்டைதீட்டப்பட்ட வைரமாக மின்ன ஆரம்பித்தது டி.ஏ. கல்யாணத்தின் பாசறையில் தான்.

(தொடரும்)

# அப்பிள் மரமும் அவனும்!



**தோ**ப்பு ஒன்றில் பெரிய அப்பிள் மரம் ஒன்று நன்கு வளர்ந்து கிளை பரப்பி நின்றது.

ஒரு சிறுவன் தினமும் அந்த மரத்தினடியில் சென்று விளையாடிக் கொண்டிருப்பான். அந்த மரத்தின் மீது ஏறி விளையாடுவதும் அதன் கனிகளைப் பறித்து புசிப்பதும் அவனுக்கு மிகவும் பிடிக்கும். களைப்பாக இருக்கும் போது அந்த மரம் தரும் நிழலில் உறங்கி ஓய்வெடுப்பான்.

காலம் உருண்டோடியது. அந்தச் சிறுவன் கொஞ்சம் வளர்ந்து விட்டான். இப்போதெல்லாம் அந்த மரத்தின் நிழலில் விளையாட அவன் வருவதில்லை.

ஒரு நாள் அவன் மரத்தை நாடி வந்தான். அந்த மரம் அவனை அன்போடு வரவேற்று, "என்ன குழந்தாய்! இப்போதெல்லாம் நீ இங்கு வருவதில்லையே... நீ என் நிழலில் விளையாடு!" என்று சொன்னது.

அந்தச் சிறுவன்; "நான் இன்னும் சின்னக் குழந்தை அல்ல. மரங்களுடன் என்னால் விளையாட முடியாது. நான் விளையாடுவதற்கு விளையாட்டு பொம்மைகள் தேவை. அவற்றை வாங்கப் பணம் தேவை" என்று சொன்னான்.

அந்த மரம், "என்னிடம் பணம் எதுவும் கிடையாது. ஆனால் நீ என்னிடமிருக்கும் அப்பிள் பழங்களைப் பறித்துச் சென்று அவற்றை விற்றால் உனக்குத் தேவையான பணம் கிடைக்கும்" என்று சொன்னது.

அந்தச் சிறுவனும் அப்படியே செய்தான். பழங்களை விற்றதில் அவனுக்கு நிறைய பணம் கிடைத்தது. அதைக் கொண்டு தனக்குப் பிடித்தமான விளையாட்டுப் பொருட்களை அவன் வாங்கிக் கொண்டான்.

ஆனால், அதன் பிறகும் அவன் மரத்தின் பக்கம் போகவில்லை. மரம் மீண்டும் தனிமையில் விடப்பட்டது.

சில ஆண்டுகள் கழித்து ஒரு இளைஞன் அந்த மரத்தை நோக்கி வந்தான். அந்தச் சிறுவன் தான் இப்போது வளர்ந்து இளைஞனாக இருக்கிறான். அந்த மரம் அவனை அடையாளம் கண்டு கொண்டது. "வா மகனே! ஏன் இப்படி சோகமாக இருக்கிறாய்? வந்து என் நிழலில் கொஞ்ச நேரம் உட்கார். இவ்வளவு நாட்களாக உன்னைக் காணாமல் நான் ஏங்கிப் போயிருக்கிறேன்" என்று அவனை அழைத்தது.

அந்த இளைஞனோ சலித்துக் கொண்டே, "எனக்கு அதற்கெல்லாம் நேரமில்லை. என் குடும்பத்திற்காக நான் உழைக்கிறேன். அவர்களுக்காக நான் ஒரு வீடு கட்ட வேண்டும். அதற்கு எனக்குப் பணம் தேவைப்படுகிறது" என்று சொன்னான்.

அந்த மரம், "கவலையை விடு மகனே! இப்போதும் என்னிடம் பணமில்லை. ஆனால், நீ எனது கிளைகளை வெட்டி உனது வீட்டை கட்டிக் கொள்ளலாம்" என்றது.

அந்த இளைஞன் சந்தோஷமாக அந்த மரத்தின் கிளைகளையும் நடுப்பகுதியையும் வெட்டி எடுத்துச் சென்று தனது குடும்பத்திற்காக வீடு கட்டிக் கொண்டான். அடிப்பகுதி மட்டுமே மிச்சமிருந்த அந்த மரம் மீண்டும் தனிமையிலாழ்ந்தது.

நீண்ட காலம் கழித்து அந்த இளைஞன் மீண்டும் அந்த மரத்தை நாடி வந்தான். இப்போது அவன் இளைஞனல்ல. மூப்படைந்திருந்த அவன் மிக களைப்படைந்தவனாகவும் சோகமானவனாகவும் இருந்தான்.

மரம் அவனிடம், "மகனே, ஏன் இப்படிச் சோகமாக இருக்கிறாய்? என் உதவி எதுவும் உனக்கு தேவையா? ஆனால், உனக்கு உதவ என்னிடம் இப்போது அப்பிள்களும் இல்லை, கிளைகளும் இல்லை. உனக்கு ஆறுதலாக நிழல் கொடுக்கக்கூட முடியாத நிலையில் நான் இருக்கிறேன்" என்றது.

அந்த மனிதன் விரக்தியாக, "எனக்கு வாழ்க்கையே வெறுப்பாகி விட்டது. நான் மிகவும் களைத்துப் போய் விட்டேன். தனியவனாகவும் ஆகிவிட்டேன். எனக்கு உன் ஆறுதல் மொழிகள் தேவை. உனது வேரில் நான் அமர்ந்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

மரம், "தாராளமாக அமர்ந்து கொள், நம்மிடம் தனிமையைத் தவிர இப்போதும் எதுவுமில்லை. இந்தத் தனிமையில் ஒருவருக்கொருவர் துணையாக இருப்போம்" என்றது.

அவன் இப்போது தினமும் அந்த மரத்தின் வேரில் சென்று அமர்ந்து தனது கவலையை மறந்து வருகிறான்.

# தேன் நல்லதா கெட்டதா



**தே**ன் மருந்துப் பொருளாகவும், உணவுப் பொருளாகவும் பண்டைய காலம் தொட்டு நம் உணவுக் கலாசாரத்தில் இடம் பிடித்திருப்பதால், மக்கள் மனதில் தேன் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக் கொண்டது. ஆனால், உண்மையில், தேன் பற்றிய மருத்துவ உண்மைகள் தேனாக இனிக்காது.

நாம் நினைக்கும் அளவுக்கு தேன் ஒன்றும் மகத்துவம் வாய்ந்தது அல்ல என்று புதிய ஒரு குண்டைப் போடுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

சாதாரணமாக கிடைக்கும் ஒரு இயற்கையான பிரக்டோஸ் குளுக்கோஸ் கரைசல் தான் தேன். இந்தக்கரைசல் சற்று இறுகி, மெழுகு பூசிய தேன் அடையில் வைக்கப்பட்டுள்ளது. இது, பெரும்பாலும், தேனீக்களின் புழு பருவத்தில் அதற்கு உணவாக பயன்படுகிறது. இது சுகாதாரம் அற்ற முறையில் தேனீக்களால் சேகரித்து வைக்கப்படும் உணவு.

தேன் ஒரு சாதாரண, கெட்டியான பிரக்டோஸ் குளுக்கோஸ் இதைத்தவிர, அதில் சிறிதளவு விற்றமின் "சி"யும், சில இயற்கையான இரசாயன வாசனைப் பொருளும், தேனீக்களின் உமிழ் நீரிலிருந்து சுரக்கும் சில அரோமற்றிக் அமிலங்களுமே கலந்தது. தேனின் வாசனை கூட இயற்கையான அரோமற்றிக் அமிலங்களாலும், பூவின் மகரந்தத்திலிருந்து வரும் நெக்டார் என்ற பொருளை தேனீக்கள் விழுங்கி, அதை திருப்பி உமிழ்வதாலும் இந்த வாசனை வருகிறது.

தேனீயின் உமிழ் நீரிலிருந்து வெளிவந்த இறுகிப்போன ஒரு இரசாயனம் தான் தேன்கூடு; இது, ஒருவித சேதன மெழுகினால் ஆனது.

இதைத் தவிர தேனில் சிறிதளவு கரோட்டின் என்ற இரசாயனப் பொருள் மற்றும் bioflavonoids போன்ற இரசாயனப் பொருளும் சிறிய அளவில் உள்ளன. இந்த இரசாயனங்கள் தான் தேனுக்கு நிறத்தைக் கொடுக்கின்றன.

சுருங்கச் சொன்னால், தேனில் சக்தி கொடுக்கும் குளுக்கோசை தவிர, வேறு எந்த சத்தும் இல்லை அதற்கு எந்த சிறப்பு மருத்துவ குணமும் கிடையாது. ஆனால், அதற்குமாறாக பிரச்சினைகளை கிளப்பும் தன்மையே அதிகம் உள்ளதாம்.

**தேன் பற்றி சில திடுக்கிடும் தகவல்கள்!**

தேனீயின் வாயில் சுரக்கும் போர்மிக் மற்றும் போர்மல்டிகைட் அமிலம் தான், தேனில் உள்ள கிருமிகள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கிறது. தேனில் உயிருள்ள கிருமி மற்றும் இறந்த கிருமிகளும் உண்டு. இந்தக் கிருமிகளிலிருந்து வெளியேறும் நச்சுப்பொருளுக்கு, "ரொக்சின்" என்று பெயர். இந்த நச்சுப் பொருள், குடல் வியாதியை உண்டாக்கும். சில சமயங்களில் அந்த நச்சுப் பொருட்கள் நரம்பு மண்டலத்தையும் செயலிழக்கச் செய்யும். பச்சிளம் குழந்தைகளுக்கு தேன் கொடுத்தால், Infant Botulism என்ற வியாதி வரும். இதனால், குழந்தைகள் மூச்சு விட சிரமப்படுவர். அதனால், ஒரு வயது வரைக்கும் குழந்தைகளுக்கு தேன் கொடுக்கக் கூடாது.

மலைத்தேன், கொம்புத்தேன், பொந்துத்தேன் என, சந்தையில் பல பெயர்களில் விற்பனை செய்யப்படும் காட்டுத் தேன் என்றால் அது, சுத்தமான தேன் என்ற எண்ணம் பலரிடம் உண்டு. ஆனால், இந்தத் தேன் மூலமும், சில சமயங்களில் இத்தகைய கிருமித் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.எந்தத் தேன் கெடுதல் செய்யும், எந்தத் தேன் கெடுதல் செய்யாது என்று கண்டுபிடிப்பது மிகவும் கடினம். இயற்கையாக கிடைக்கும் தேனிலும் அபாயம் உண்டு வீட்டில் சேமித்து வைத்திருக்கும் இயற்கைத் தேனிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இதைத் தவிர்க்க, பதப்படுத்தப்பட்ட மற்றும் புறஊதாக் கதிர்களால் சுத்தப் படுத்தப்பட்ட தேனைச் சாப்பிடுவதன் மூலம், இந்தப்பிரச்சினையிலிருந்து தப்பிக்கலாம்.

# கண்டுபிடித்தார்கள்...



- ஒருவர் கை ரேகையைப் போல் இன்னொருவருக்கு இருப்பதில்லை என்ற உண்மையைக் கண்டுபிடித்தவர் கால்ரன் என்ற இங்கிலாந்துக்காரர்.
- உடனடி உணவு என்று சொல்லப்படும் FastFood -ஐ அறிமுகப்படுத்தியவர் அமெரிக்காவைச் சேர்ந்த ரிச்சர்ட் மக்டொனால்ட் என்பவர்.
- மேக்கப் முறையைக் கண்டுபிடித்தவர் மக்ஸ் ஃபொக்டர்.
- செல்ஃபோனின் (மொபைல் போன்) தந்தை என அழைக்கப்படுபவர் மார்ட்டின் கூப்பர்.
- உலகிலேயே முதன் முதலாக டயரியை வடிவமைத்து இங்கிலாந்தில் கி.பி.1816 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதை வெளியிட்ட "ஜான்லெட்ஸ்" என்பவர் ஸ்டேஷனரி கடையின் உரிமையாளர்!
- ஜொலி பெலின் என்ற பிரெஞ்சுக்காரர் தன் உடையில் ஏற்பட்ட கறையைப் போக்க வழி தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார். அப்போது கைதவறி மண்ணெண்ணெய் அதில் சிதறிவிழ, கறை மெல்ல மெல்ல நீங்க ஆரம்பித்ததாம். அதன் அடிப்படையில் 1840 ஆம் ஆண்டில் "ட்ரை" கிளீனிங் (லோண்ட்ரி) கடையைத் திறந்தார்.
- பிரான்ஸ் நாடுதான் பைகளில் பாலை அடைத்து விற்பதை அறிமுகப்படுத்தியது.
- மடிப்பு ஓலை விசிறியை உருவாக்கியவர்கள் ஜப்பானியர்கள்.
- கால்புள்ளி(,), அரைப்புள்ளி(;), வியப்புக்குறி(!) ஆகியவற்றை கிரேக்கர்கள் தான் கண்டுபிடித்தார்கள்!
- குதிரை சேணத்தைக் கண்டுபிடித்தவர்கள் சீனர்கள்.
- மாலுமிகளுக்கான திசை காட்டும் கருவியைக் கண்டுபிடித்தவர்களும், சீனர்கள்.
- பொப்கோர்ன் இயந்திரத்தை சார்ள்ஸ் சி.கிரீட்டர்ஸ் என்பவர் 19 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடித்தார்.
- முதன்முதலில் வட்டத்தை 360 பாகையாகப் பிரித்து அறிந்தவர்கள் சுமேரியர்கள்.

# புதிர்ப்போட்டி இல. 09

அனுப்பவேண்டிய முகவரி
புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு பாடங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

## புதிர் வினா - 9.1


1) அக்கணத்தில் பிக்குகள் குழுவாகப் பாடல்களைப் பாடத் தொடங்கினர். ஆறு தேவலோகங்களிலிருந்து ஆறு தெய்வங்கள் ஆறு இரதங்களில் அவ்விடத்திற்கு வந்தனர். தெய்வங்கள் தமது இரதங்களில் இருந்துகொண்டு தமது தேவலோகத்திற்கு வருமாறு துட்டகைமுனு அரசரைத் தனித்தனியாக வேண்டினர்.

அவர்களின் வார்த்தைகளைக் கேட்ட அரசர் "நான் தர்மத்திற்கு செவிமடுக்கும் வரைக்கும் தங்கியிருப்பேன்" என்று கையினால் சைகை செய்தார். பாடல்களைப் பாடுவதை நிறுத்துமாறு அரசர் கூறினார் என்று நினைத்து பிக்குகள் பாடல்களை நிறுத்தினர். பாடுவதை நிறுத்தியமைக்கான காரணத்தை அரசர் விசாரித்தார். "நிறுத்துமாறு சைகை செய்தமையால்" என்று பிக்குகள் கூறினர் அரசர் "அவ்வாறான்று சுவாமிகளே" என்று சொல்லி நடைபெற்ற விடயங்களை எடுத்துரைத்தார். அதனைக் கேட்ட சில மக்கள் அரசர் மரணப் பயணத்தினால் பீடிக்கப் பட்டிருக்கின்றமையால் உறுதியாக கதைப்பதை தெரியவில்லை என்ற நினைத்தனர். அவர்களுடைய சந்தேகத்தை நீக்குவதற்கு அபய தேரர் பின்வருமாறு கேட்டார். "இங்கு கொண்டுவரப்பட்டுள்ள இரதங்களை பார்ப்பதற்கு ஒழுங்குகளைச் செய்வது எங்ஙனம்? அவ்வாறில்லாத அரசர் வானில் பூமாலைகளை வீசியெறியுமாறு கட்டளையிட்டார். பூமாலைகள் தனித்தனியாக இரதங்களின் தண்டுகளில் விழுந்து தொங்கின.

பின்வரும் எக்கூற்று உண்மையானது


1) அரசர் இரதங்களின் ஒன்றினுள்ளேயே பிரவேசிக்க வேண்டியிருந்தது.
2) அரசர் கீதங்களைப் பாடுவதை நிறுத்துமாறு பிக்குகளிடம் வேண்டினார்.
3) அரசர் தருமத்திற்குச் செவிமடுக்க வேண்டியிருந்தமையால் தெய்வங்களிடம் அவ்வாறு சைகை செய்தார்,
4) அரசர் மரணப் பயணத்தில் பீடிக்கப்பட்டிருந்தார்.
5) அரசர் இரதங்களை பூமாலைகளினால் அலங்கரிப்பதற்கு விரும்பினார்.

2) A,B என்ற இரு சைக்கிளோட்டிகள் தமது சைக்கிள்களை ஒரேநேரத்தில் செலுத்தத் தொடங்கினர். அவர்கள் இருவரினதும் தொடக்கக் கதிகள் பூச்சியமாகும். தொடக்கத்தில் A ஆனவர் B யின் கதியிலும் பார்க்கக்கூடிய வீதத்தில் தமது கதியை உறுதியாக அதிகரிக்கச் செய்தார். எனினும் சிறிது நேரத்தின் பின்னர் A கதியைக் குறைக்கும் அதேவேளை, B தனது கதியை உறுதியாக அதிகரிக்கச் செய்கின்றார். இவருடைய கதிகளும் சமமாக இருக்கும் போது A தான் முன்னர் அடைந்த உயர்ந்தபட்சக் கதியை அடையும் வரைக்கும் தனது கதியை மறுபடியும் அதிகரிக்கச் செய்யத் தொடங்கும் அதேவேளை, B தனது கதியைப் படிப்படியாகக் குறைக்கத் தொடங்குகின்றார். பின்வரும் எவ்வுரு சைக்கிளோட்டிகளின் இயக்கத்தை வகை குறிக்கின்றது?




மோகன் ரவியிலும் பார்க்க மூன்று மடங்கு விரைவாக ஓடுகின்றார். ரவி மோகனிலும் பார்க்க 100 மீற்றர் முன்னால் நின்று கொண்டு ஒரு போட்டியில் ஓடத் தொடங்குகின்றான். மோகன் ரவியைக் கடக்கும் நேரத்தில் ரவி ஓடியுள்ள தூரம் யாது?


1) 25 மீற்றர் 2) 50 மீற்றர்
3) 75 மீற்றர் 4) 100 மீற்றர்
5) 125 மீற்றர்

4) 

3) A, B என்னும் உருக்கள் ஒரு குறித்தவிதத்தில் தொடர்புபட்டுள்ளன. இதே விதத்தில் உரு C உடன் தொடர்புபட்டுள்ள உரு பின்வருவனவற்றுள் யாது?



5) B யின் தாய் A ஆவார். C, D ஆகியோர் முறையே A,A ஆகியோரின் கணவர்களாவர். பின்வரும் எது ஊயிற்கும் D யிற்குமிடையே உள்ள தொட்பாகும்.
1) C ஆனவர் D யின் தந்தையாவர்
2) C ஆனவர் D யின் மகனாவர்.
3) C ஆனவர் D யின் மருமகனாவார்
4) C ஆனவர் D யின் மாமனாவார்
5) C ஆனவர் D யின் சகோதரராவார்

6) 

மேற்குறித்த A,B என்னும் உருக்கள் ஒவ்வொன்றிலும் இடக்கைப் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள பொருள்கள் வலக் கைப்பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்களைச் சமன்செய்கின்றன. கோளங்கள் எல்லாம் ஒத்தவை. சதுரமுககள் ஒன்றுக்கொன்று சமன் கூம்புகள் எல்லாம் ஒத்தவை. தராசு D யின் வலக்கைப் பக்கத்தில் உள்ள பொருள்கள். இடக்கைப் பக்கத்திலுள்ள பொருள்களைச் சமன் செய்வதறகு அதன் வலக்கைப் பக்கத்தில் பின்வரும் எது சேர்க்கப்பட வேண்டும்.



1) 2) 3) 4)

## கணக்குப்புதிர்

பெண்ணொருத்தி ஓர் கடையில் 200 ரூபாய் மதிப்புள்ள ஒரு பொருளை வாங்கினாள். கடை முதலாளியும் இலாபம் ஏதும் இன்றி அவ்விலைக்கு விற்க 1000 ரூபாய் கள்ள நோட்டை கொடுத்தாள் அவள்.அதை கவனிக்காத கடை காரர் 1000 ரூபாய் நோட்டை வாங்கி கொண்டு சில்லறை இல்லாத காரணத்தினால் பக்கத்து கடைக்கு சென்று 1000 ரூபாய் நோட்டை கொடுத்து சில்லறை வாங்கி வந்தார்.

திரும்ப கடைக்கு வந்து 200 ரூபாயை கல்லாவில் வைத்து கொண்டு மீதி 800 ரூபாயை அப் பெண்ணிடம் கொடுத்துவிட்டார். சிறிது நேரம் கழித்து போலி நோட்டை அடையாளங் கண்ட பக்கத்து கடை காரர், முதல் கடைக்காரரிடம் வந்து 'இந்த 1000 ரூபாய் நோட்டு கள்ள நோட்டு' என்று சொல்லி கொடுத்து விட்டு 1000 ரூபாய் தூய நோட்டாக வாங்கி சென்றார். முடிவில் முதல் கடை காரருக்கு எவ்வளவு நட்டம்?

## சரியான விடைகளை எழுதி ப்ாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:- யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் கல்லூரி.

பெயர் :- கே.நிலவன்
தரம் :- 7
பாடசாலை:- கிளி/ பூநகரி மகா வித்தியாலயம்.

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------------------
பாடசாலை :- ------------------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------------------
வீட்டு முகவரி :- ------------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------------

## சென்றவார புதிர்களுக்கான விடைகள்

### இல .8.1

#### கதைகேளு கணக்குப் போடு

6 அலுமாரிகள், 3 சகோதரிகள்

முதல் சகோதரி 1,3,5 ஆம் அலுமாரிகளிலிருந்து புத்தகங்களை எடுத்தார். அவரிடமிருந்த மொத்தப் புத்தகங்கள் 132 (62+38+32)

இரண்டாம் சகோதரி 4,6 ஆம் அலுமாரிகளிலிருந்து புத்தகங்களை எடுத்தார். அவரிடமிருந்த புத்தகங்கள் 66 (36+30). இது முதல் சகோதரியிடமிருந்த புத்தக எண்ணிக்கையில் பாதியாகும்.

மூன்றாம் சகோதரி 2 ஆம் அலுமாரியிலிருந்து புத்தகத்தை எடுத்தார். அவரிடமிருந்த புத்தகங்கள் மொத்தம் 33. இது இரண்டாம் சகோதரியிடமிருந்த புத்தக எண்ணிக்கையில் பாதியாகும்.

### இல .8.2

நாய் மட்டுமல்ல, எல்லா விலங்குகளுக்கும் இந்தப் பண்பு உண்டு. உடலில் காயம் ஏற்பட்டால், அ[illegible] தன் எச்சிலைக் கொண்டே சரி செய்து கொள்ளும். மனிதன் உட்பட உமிழ்நீர்ச் சுரப்பியில் லைசோசைம் உள்ளது. இது பாக்ரீரியாக்களை அழிக்கவல்லது. நாய் தன் எச்சிலைக் கொண்டு தடவும்போது காயத்தின் மீது பாக்ரீரியா போன்ற நுண்கிருமிகள் நுழையாதபடி காத்துக் கொள்கிறது. இது நாயின் சுய வைத்தியமாகும். இதனால், காயமும் விரைவில் குணமாகும். •

### இல .8.3

திதத்தத்தத் தித்தத் - திதத்தத்தத் தித்த என்னும் தாளமானங்களை
திதி திருநடத்தால் காக்கின்ற
தாதை - பரமசிவனும்
தாத - பிரமனும்
துத்தித் படப் பொறியினை உடைய
தத்தி பாம்பினை உடைய
தா - இடத்தையும்
திதத் - நிலைபெற்று
தத்து ததும்புகிற
அத் தித் சமுத்திரத்தையும் பாயலாகக் கொண்டு
ததி - தயிரானது
தித்தித்ததே - தித்திக்கிறதென்று
துத் - உண்ட கண்ணனும்
துதித்து துதி செய்து வணங்குகிற
இதத்து பேரினப சொரூபியான
ஆதித - முதல்வனே
தத்தத்து தந்தத்தை உடைய
அத்தித் அயிராவதம் என்னும் யானையால் வளர்க்கப்பட்ட
தத்தை கிளி போன்ற தெய்வயானைக்கு
தாத - தாசனே
திதே - தீமையே
துதை - பொருந்திய
தாது சப்த தாகுக்களால் நிறைந்த்தும்
அதத்து மரணத்தோடும்
உதி சனனத்தோடும்
தத்து பல தத்துக்களோடும்
அத்து - இசைவுற்றதுமான
அத்தித் - எறும்பு
(தித்தி தீதீ) இந்தப் பகுதிக்கு உரை விடுபட்டுள்ளது.
திதி அந்த நாளிலே
துதி உன்னைத் துதிக்கும்
தீ - புத்தி
தொத்ததே அனக்கே அடிமையாக வேண்டும்
இந்தப் பாடலில் தீ எழுவாய், தொத்த்து பயனிலை.
ஏ அசைநிலை
பழைய உரையைத் தழுவிச் செங்கலவராய பிள்ளை எழுதிய உரை

கருத்து

தாளத்தால் நடிக்கும் பரமசிவனும், பிரமாவும், தயிரை உண்டு, பாற்கடலையும் ஆசிசேடனையும் பாயலாகக் கொண்ட திருமாலும் வணங்குகிற முதல்வனை! தெய்வயானை தாசனே! சனன மரணத்துக்கு இடமாய், எலும்பு முதலிய தாதுக்கள் நிறைந்த பொல்லாத இந்த உடம்பை, தீயில் வேகுங்கால், உன்னைத் துதிக்கும் என் புத்தியை உன் அடி இணைக்கு ஆட்படுத்த வேண்டும். •

## நகைச்சுவை புதிர் விடைகள்

1) அமெரிக்காவின் வொரீண்டனில் வெள்ளை மாளிகை இருக்கும்.
2) அவரது தலை மொட்டையாகும்.
3) உங்கள் கண்களின் நிறம். நீங்களே பஸ் நடத்துனர்.
4) உயிர் தப்பியவர்களை அடக்கம் செய்ய மாட்டார்கள். உயிரிழந்தவர்களையே அடக்கம் செய்வார்கள்.
5) 'தலா' என்பது ஒருவனின் பெயராகும். மற்றையவர்கள் 11 பேரும் பழம் பறிக்கவில்லை.

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு விதைநெல் விநியோகம்



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடம் பருவமழை இன்மையால் நெற்செய்கை அழிவடைந்திருந்தது. இந்த நிலைமையால் தற்போது மாவட்ட விவசாயிகள் விதை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே விவசாயிகளின் இந்த நிலைமையினை கருத்தில் எடுத்து தற்போது விதை நெல் வழங்கப்பட்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் 1462 ஏக்கர் நிலப்பரப்பிற்கான 2924 புசல் விதை நெல் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு விதை நெல்லை வழங்கி வைத்தார்.

கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி, அக்கராயன், உருத்திரபுரம், புளியம்பொக்கனை, முழங்காவில் கமநலசேவை நிலையங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கே விதை நெல் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வருடம் பருவ மழை பொய்த்துப் போனமையால் இவ்வருடம் விவசாயிகள் விதை நெல்லைக் கூட பெற முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையினை கருத்தில் எடுத்து நாம் பல்வேறு வழிகளில் விவசாயிகளுக்கு விதை நெல்லை பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டு தற்போது விதை நெல்லை வழங்கி வருகின்றோம். அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாக விதை நெல் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் தற்போது அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற விதை நெல் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரியில் சோ.பா நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விதை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதுடன் உலக உணவு விவசாய அமைப்பினால் வழங்கப்படுகின்ற விதை விநியோகிக்கப்படவுள்ளது. தொடர்ந்து அரசினால் வழங்கப்படவுள்ள விதைநெல் விரைவில் விவசாயிகளுக்கு கிடைக்கவுள்ளது. எனவே விவசாயிகள் இந்தச் சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனத்தெரிவித்தார்.

குறிப்பாக விவசாயிகள் அழிவிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு விவசாய காப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பி வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சு.மனோகரன், கிளிநொச்சி கமநல சேவைகள் உதவி ஆணையாளர் தயாரூபன், பெரும்பாக உத்தியோகத்தர்களான கதிர்காமநாதன், ஜனார்த்தனன், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். இந்துக்கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பழைய மாணவனும், சாந்தியகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், ஆசிய பிராந்திய சிறுவர் பாதுகாப்பு ஆலோசகருமான ஜெ.தற்பரன் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வின் முதல் நிகழ்வாக மங்கள விளக்கேற்றல் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து இறை வணக்கமும் இடம்பெற்றது. அதன் பின்னர் வரவேற்புரையும் அதனை தொடர்ந்து தலைவர் மைத்திரேஜன் சர்மாவின் தலைமையுரையும், அதிபருடைய ஆசியுரையும் இடம் பெற்றது.



பின்னர் சிறுவர் செயற்பாட்டு கழகத்தின் பொறுப்பாசிரியர் கு.மகிழ்ச்சிகரனுடைய உரையும் பிரதம விருந்தினர் உரையும் இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து அண்மையில் சிறுவர் செயற்பாட்டு கழகத்தினால் கல்லூரியில் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினராலும், அதிபரினாலும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதன் பின்னர் மாணவர்களுடைய கலைநிகழ்வுகள் நடைபெற்றதுடன் முதல் நிகழ்வாக மாணவர்களுடைய பல்லியம் எனப்படும் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து நடன நிகழ்வு, பாடல், கவிதை, நாடகம் போன்றனவும் இடம் பெற்றன. இறுதியாக நடைபெற்ற நன்றியுரையுடன் நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிறைவு பெற்றன. (48)

# மன்னார்- யாழ். பேருந்தால் சிரமங்களுக்குள்ளாகும் மக்கள்

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்துகள் பிற்பகல் 3.45 மணி தொடக்கம் நான்கு மணிவரை பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்பாகத் தரிக்கவிடப்படுவதாகப் பிரயாணிகள் குற்றச்சாட்டு விடுத்துள்ளனர்.

பூநகரி பிரதேச செயலகத்தில் கடமை புரியும் ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்காக இவ்விதம் நடைபெற்று வருகிறது. இதனால் பிரயாணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை பேருந்தைப் பிடிப்பதற்காக பிற்பகல் 5.00 மணிக்கு நிறைவு செய்ய வேண்டிய கடமை நேரங்களில் ஒருமணி நேரம் முன்னதாகவே ஊழியர்கள் வெளியேறி விடுவதால் பூநகரி பிரதேச மக்கள் தமது உத்தியோக பூர்வக் கடமைகளை முடித்துக்கொள்வதிலும் பின்தள்ளப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (68)

# வாரம் ஒரு காரம்

## இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன அயோத்திக்கு வேண்டியது எது?....



ஊவா மாகாணசபைத் தேர்தலின் உண்மைகள் ஏதோ இருக்க. அரசின் தோல்வி தொடர்பாக பக்கம் பக்கமாகப் பத்திரிகைளும் ஆராய்கின்றன. கூட்டமைப்பும் இது தொடர்பாக மேடைகளில் ஏதேதோ பேசுகின்றது.

கூட்டமைப்பிடம் நாம் கேட்கும் கேள்வி இது தான்: **'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி தோற்று நீங்கள் கூறுவது போல எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் அந்த அரசோடேனும் இணைந்து மக்கள் அபிவிருத்திக்காக உழைப்பீர்களா?... அல்லது அரச எதிர்ப்புத்தான் எங்கள் ஆப்த வாக்கியம் என்று அந்த அரசோடும் வீரவசனம் பேசுவீர்களா?...'.**

அவ்வாறு தான் நடக்குமென்றால் தென்னிலங்கை அரசியல் மாற்றம் பற்றி நாமேன் அலட்டிக் கொள்ள வேண்டும்?....

பொதுபல சேனாவின் 'பௌத்த தேசிய இனவாதம்' தென்னிலங்கையில் தலைவிரித்தாடுவதாலும் அதற்கு அரசு உடந்தையாக இருப்பதனாலும் ஊவா மாகாண சபைத்தேர்தலில் முஸ்லீம் மக்களின் ஆதரவினை அரசு இழந்தது.

இதே போல கூட்டமைப்பின் இனவாதம் வடபுலத்தில் தலைவிரித்தாடுவதாலும் தமிழ்மக்களின் பெரும்பான்மை அதற்கு உடந்தையாக இருப்பதனாலும் சிறுபான்மைத் தமிழினம் தீர்வினை இழந்து இருக்கின்றது. இது தான் உண்மை.

இனவாத வெறிகளிற்கப்பால் **'மக்களின் வாழ்வுரிமை பற்றி'** என்று யார் சிந்தித்து, விட்டுக் கொடுக்கின்றார்களோ அன்றுதான் தென்னிலங்கையின் அரசியல் மாற்றம் தொடர்பாக சிறுபான்மையினம் சிந்திக்கவேண்டும்.

அன்று யாழ் பல்கலைக்கழகம் தோன்றிய போது எதிர்த்தார்கள், கிளிநொச்சியில் விவசாயபீடம் தோன்றிய போது விமர்சித்தார்கள். காப்பெற் வீதியில் கடுகதி வேகத்தில் பயணித்துக்கொண்டு 'வீதியில் அபிவிருத்தி வீட்டிற்குள் இல்லை' என்கின்றார்கள். யாழ்தேவி எதற்காக வருகின்றது?... என்று கூடக் கூறுகின்றார்கள். அச்சுவேலிக் கைத்தொழில்பேட்டை ஏன் திறக்க வேண்டும் என்றார்கள்?....

இவற்றை விட வெளிப்படையாக ஒரு மொழியில் தெளிவாகக் கூறலாமே **'ஏன் தமிழ் மக்களின் வாழ்வியல் அபிவிருத்தியடைய வேண்டும்.' என்று...**

**அபிவிருத்தியின் ஆரவாரம் ஆங்காங்கே தெரிந்தால் அரச எதிர்ப்பிற்கு மக்கள் ஆதரவு காட்டமாட்டார்கள். ஆகவே அபிவிருத்தியை நிறுத்தினால் தான் அரசினைக் குறை கூறும் பிரச்சாரத்தை வலுப்படுத்த முடியும் என்பதே இதன் அடிப்படையாகும்.**

அரசு தமிழர்களின் காணிகளைப் பறிக்கின்றது என்கின்றோம், சிங்களக் குடியேற்றங்களைப் பரவலாக்கி பௌத்த தேசிய நாடு என்பதை விரிவாக்க முனைகின்றது என்கின்றோம். சரி அப்படியானால் அதை நிறுத்த என்ன வழி?

ஆயுதமேந்திப் போரடினோம் முடிந்ததா?... அகிம்சை வழியில் நீராகாரம் கூட இல்லாமல் போராடினோம் கிடைத்ததா?... சர்வதேசத்தை நம்பி அரசியல் போராட்டங்கள் நடாத்தினோம் மாற்றம் வந்ததா?.... மக்கள் மயப்படுத்தி மக்கள் புரட்சியெனக் காட்டி பொங்கு தமிழில் பொங்கியெழுந்தோம். உருண்ட தலைகளைத் தவிர உருமாற்றம் ஏதாவது கிடைத்ததா?... மாகாண சபை அதிகாரங்கள் மூலம் மத்திய அரசை மண்டியிட வைக்கலாமென முயன்றோம். முடிந்ததா?

இத்தனைக்கும் பின்பேனும் இணக்க அரசியல் தான் இலங்கைச் சிறுபான்மைக்கு இருக்கும் ஒரேயொரு வழி யென்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். கூட்டமைப்புக்கு இது புரியாது. ஏனெனில் தெரிந்து கொண்டு செய்யும் அவர்களின் செயற்பாடுகள் தான் இவை.


இணக்க அரசியல் மூலம் இருக்கின்ற அதிகாரங்ளை வலுப்படுத்தி நிச்சயம் தமிழ் மக்களிற்கான வாழ்வியல் உரிமைகளை வென்றெடுக்க முடியும். ஆனால் இதற்கான அதிகாரங்ளைத் தான் தமிழர்கள் இதுவரை எவர்க்கும் வழங்கவில்லையே...

சிங்கள இனவாதத்தைத் தூண்டும் திரி தூண்டிகளாகவே கூட்டமைப்பு அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றார்கள். தமிழர் உரிமைகளை வென்றெடுக்கும் வழி இதுவல்ல என்று தெரிந்தும் கூட சுயலாப நிலைப்புக்காக தொடர்ந்தும் தவறுகள் இழைத்து வருகின்றார்கள்.

இதனால் சிங்கள இனவாதக்கட்சிகள் புதிது புதிதாகத் தோன்றி ஆளும் தரப்புக்கும் சிறுபான்மை இனங்களிற்குமான முரண்பாடுகளைத் தோற்றுவித்த வண்ணமேயிருக்கும்.

ஆகவே தமிழர்க்கான தீர்வினை தென்னிலங்கையில் இருந்து எதிர்பார்ப்பதை விட இங்கிருந்து தென்னிலங்கைக்கு அனுப்பிவைக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

# நவராத்திரி விழாவில் பங்கேற்பு



(கொழும்பு)

பனை அபிவிருத்தி சபையின் கொழும்பு காரியாலயத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சபையின் கொழும்பு அலுவலகத்தில் நவராத்திரி விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நவராத்திரி பூசை வழிபாடுகளில் அமைச்சர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன்போது பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தலைவர் மார்சல் ஜனதா, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா உள்ளிட்ட அமைச்சின் துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# பண்ணையாளர்கள் கௌரவிப்பு



இலங்கையிலுள்ள பாற்பண்ணையாளர்களின் வாழ்வுக்கு வலுவூட்டுவோம் எனும் தொனிப்பொருளில் நெஸ்லே நிறுவனத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்விலும் பண்ணையாளர்கள் கௌரவிப்பு நிகழ்விலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்து கொண்டு பிரதம விருந்தினர் உரையினையாற்றினார்.

நிகழ்வில் நாடளாவிய ரீதியில் சிறந்த பண்ணையாளர்கள் எட்டு பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் சான்றிதழ்களும் வழ்ங்கப்பட்ட அதேவேளை, தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று பேருக்கும் வீசேட நினைவுப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

முன்பதாக பிரதான வாயிலிலிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட அமைச்சர்கள் பிரதான மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

இதில் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கணேசன் அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர்களான ஜகத் புஸ்பகுமார, ஜோன்சன் பொனான்டோ, சி.பி ரட்னாயக்க, அநுர பிரியதர்சன யாப்பா, மகிந்த யாப்பா அபேவர்தன உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# கைவினை கைப்பணிக் கிராமம்



அம்பாந்தோட்டை கவான் திசபுர பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கைவினை கைப்பணி கண்காட்சி மற்றும் விற்பனைக்கூடங்களின் நிர்மாணப் பணிகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்தறிந்து கொண்டார்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அப்பகுதியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் குறித்த கைப்பணிக் கிராமத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பிலான தற்போதைய நிலவரங்கள் குறித்து ஆராயப்பட்டன.ஏற்கனவே நிறைவுபெற்ற வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் அமைச்சர் துறை சார்ந்தோருடன் கேட்டறிந்து கொண்டார். அத்துடன் கட்டட ஒப்பந்தகாரர்களால் முடிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் அவற்றிலுள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் இதன்போது விசேட கவனம் செலுத்தியிருந்தார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் புத்திகீர்த்திசேன, அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் பதில் செயலாளர் சந்துரு உள்ளிட்ட துறைசார்ந்தோர் உடனிருந்தனர்.

# சுகாதாரத்தில் அக்கறை


(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவிலடி பின் வீதி யில் சுகாதாரத்தை பேணும் வகையில் குப்பைகள் கொட்டுவதற்கான சிமெந்து தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

வீதியின் அருகே தனியார் காணியின் மதில் சுவருடன் இணைந்ததாக இந்தக் குப்பைகள் போடும் சிமெந்து தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி குப்பைகள் அற்று அழகாகக் காட்சியளிக்கிறது.

(85)



# விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மிருசுவில் பகுதியில் அனுமதியின்றி மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம், நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

குறித்த பெண் அனுமதியின்றி மதுபானங்கள் விற்பனை செய்துகொண்டிருக்கும் போது, கொடிகாமம் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

மேற்படி பெண்ணிடமிருந்து 175 மில்லிலீற்றர் மதுபான போத்தல்கள் 13 கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் 10 ஆயிரம் பேருக்கு இடமாற்றம்



(கொழும்பு)

பொலிஸ் பரிசோதகர் பதவியிலிருந்து அதற்கும் குறைந்த பதவிகளை வகிக்கும் பத்தாயிரம் உத்தியோகத்தர்கள் அடுத்த ஆண்டு இடமாற்றம் செய்யப்பட உள்ளனர்.

இதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரண்டாண்டுகளுக்கு மேல் கடமையாற்றிய 4462 பொலிஸ் உத்தியோகத்தர்களும், சாதாரண கடமையில் ஈடுபட்டு வரும் 4462 பொலிஸ் உத்தியோகத்தர்களும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இதற்கு மேலதிகமாக சாதாரண கடமைகளில் ஈடுபட்டு வரும் 846 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக 12 பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட உள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஐந்து பேருக்கு சேவை நீடிக்கப்பட உள்ளது.

தற்போது பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றி வரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன பிரதிப் பொலிஸ் மா அதிபராக பதவி உயர்த்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக பொலிஸ உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு பதவி உயர்வுகள் வழங்கப்பட உள்ளன.

# விடுமுறையில் சென்ற கைதி 13 வீடுகளில் கொள்ளை

கொள்ளைச் சம்பவங்கள் பலவற்றுடன் தொடர்புபட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வந்த கைதி ஒருவர் விசேட விடுமுறையில் வீடு திரும்பி மறுபடியும் வீடுடைத்து கொள்ளையில் ஈடுபட்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

47 கொள்ளைச் சம்பவங்களில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 22 வருட சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நபர் சிறைக்குள் ஒழுக்கமாக நடந்து கொண்டதால் அவருக்கு வீடு செல்ல மூன்று நாள் விசேட விடுமுறை வழங்கப்பட்டது.

அதன்படி வீட்டுக்குச் சென்ற நபர் 13 வீடுகளில் கொள்ளையடித்து 8 இலட்சத்திற்கும் அதிகம் பெறுமதியான பொருட்களை களவாடியுள்ளார்.

தெஹிவளை பகுதியில் 13 வீடுகளில் கொள்ளையடித்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

55 வயதுடைய நபரிடம் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

# தலைமைத்துவப் பயிற்சி இரண்டாம் கட்டம் இன்று

பல்கலைக்கழக புதிய அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியின் இரண்டாம் கட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 20 முகாம்களில் 9215 மாணவர்கள் தலைமைத்துவப் பயிற்சி பெறவுள்ளனர்.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஹஜ் பெருநாள் வருவதால் முஸ்லிம் மாணவர்கள் 7 ஆம் திகதி பயிற்சியில் பங்கேற்க முடியும் என உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தலைமைத்துவ பயிற்சிக்கு இம்முறை 23,000 மாணவர்கள் தகுதி பெற்ற நிலையில் கடந்த மாதம் 26ஆம் திகதி நிறைவடைந்த முதல் கட்டத்தில் 7030 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

வரலாறு

## பகுதி I

1) வரலாற்றுக்கும் புவியியலுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் கூற்றாவது.
1) காலத்திற்குக் காலம் நிலநடுக்கம் ஏற்படல்.
2) சூறாவளிக்காற்றும் மழையும் கிடைத்தல்.
3) சர்வசன வாக்குரிமையின் மூலம் நாட்டின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல்.
4) மலையகம் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் ஆக்கிரமிப்புக்கு உட்படாமை.

2) இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும் செவிவழி இலக்கிய மூலாதாரமாவது,
1) நாட்டார் பாடல்கள் 2) வம்சக் கதைகள்
3) சீகிரியக்கவிதைகள் 4) மகாகாவியம்

3) பதுத்தளைத்தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்
1) முடிசூட்டு விழா 2) சமகால வர்த்தகம்
3) ஆராமை நிர்வாகம் 4) பிராமரணது கல்வி

4) வேதங்களில் குறிப்பிடப்படாத விடயமாவது
1) கடவுளரின் திருவுருவங்கள் பற்றிய விடயம்
2) விவசாயத்துடன் இணைந்த வாழ்க்கை முறை பற்றியது
3) இருககுயசுர், சாம, அதர்வம் பற்றியது.
4) பௌத்த தர்ம வேலைகள் நடைபெறும் முறைகள்.

5) பதினாறு பெரும் ஆரியக்குடியேற்றம் அல்லாதது
1) மகதம் 2) டில்லி 3) கோசலை 4) அவந்தி

6) கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் அனைத்துடனும் தொடர்புடைய மன்னன்
A - குப்த பேரரசின் நிர்வாகி
B - கவிஞன்
C - சங்கீத வித்துவான்
D - நீலராஜன், விஷ்ணு எனும் மன்னர்களை வெற்றி கொண்டவன்.
1) சந்திரகுப்தன் 2) II ஆம் சந்திரகுப்தன்
3) சமுத்திரகுப்தன் 4) குமாரகுப்தன்

7) வேத காலத்தில் இலங்கையின் மனித வரலாற்றில் மனித வாழ்க்கைக்குட்படாத இடம்
1) தம்புள்ளை குகை 2) பட்டதொம்பே குகை
3) கிதுள்கல பெலிலேன குகை 4) அத்னகொட அலுலேன

8) மன்னரது முறையான முடிசூட்டு விழாவிற்கு அவசியமான பொருட்கள் புராதன காலத்தில் அழைக்கப்பட்ட முறை
1) அரசவம்ச பொருட்கள் 2) அரச பரிவட்டப் பொருட்கள்
3) அரச பாவனைப் பொருட்கள் 4) திவ்ய ஆபரணங்கள்

9) இலகம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன்
1) வசபன் 2) வலகம்பா
3) துட்டகைமுனு 4) கவன்தீசன்

10) அனுராதபுர யுகத்தின் முதல் மன்னனும் இறுதி மன்னனும்
1) பண்டுகாபயன் - V ஆம் மகிந்தன்
2) விஜயன் - V ஆம் மகிந்தன்
3) பண்டுபாபயன் - IV ஆம் சேனன்
4) பண்டுகாபயன் - I ஆம் விஜயபாகு

11) மகாசேன மன்னன் அழைக்கப்படும் சிறப்புப் பெயர்
1) மின்னேரித் தெய்வம் 2) மினிப்பே தெய்வம்
3) காவல் தெய்வம் 4) சமன் தெய்வம்

12) அனுராதபுர இராசதானியின் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டிருந்த முறை
1) ராசரட்டை, தக்கிணதேசம், ரோகணதேசம், மலயரட்டை
2) ருகுணு, மாயரட்டை, பிகிடிரட்டை
3) உத்தரபஸ்ஸ, தக்கிணபஸ்ஸ, பிராசினபஸ்ஸ, பஸ்சிமபஸ்ஸ
4) வடக்கு, கிழக்கு, மத்திய

13) அனுராதபுர காலத்தில் சேனவிரத்ன என அழைக்கப்பட்டவர்
1) யுவராஜன் 2) பிரதம அமைச்சர்
3) புரோகிதன் 4) சேனாதிபதி

14) குளத்தின் அணைக்கட்டின் உட்புறத்தில் கருங்கற்களை நிரப்பி அமைக்கப்படும் அமைப்பு என்ன பெயரால் அழைக்கப்படும்?
1) சுருங்கை 2) அலைதாங்கி
3) கலிங்கற்தொட்டி 4) கலிங்கல்

15) தம்பதெனிய இராசதானி காலத்தில் புனித தந்ததாதுவையும் பாத்திர தாதுவையும் பிரதிட்டை செய்த இடம்
1) கண்டியின் செங்கடகல மலைப்பகுதி
2) கேகாலை பெலிலேன பகுதி
3) பொலனறுவை கல்விகாரை
4) களனி விகாரை

16) திரச, மயூர சந்தேச காவியங்கள் எழுதப்பட்ட காலம்
1) தம்பதெனிய காலம் 2) யாப்பகூவ காலம்
3) குருநாகல் காலம் 4) கம்பளை யுகம்

17) தம்பதெனிய யுகத்தில் எழுதப்பட்ட காவியங்கள்
1) திரச சந்தேச, மயூர சந்தேச, அந்தகலுவங்ச.
2) கிராசந்தேச, செலலிகினி சந்தேச, லொவெடசங்கிராவ.
3) கவிசிலுமின, சந்தரமரத்னாவலிய, விசுத்திமார்க்கசன்னய.
4) கோகிலசந்தேச, ஹங்ச சந்தேச, குத்திய காவியம்

**18 - 21 வரையான வினாக்களுக்கு படத்தினை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.**




18) படத்தில் 1, 2, 3, 4 எனும் இலக்கங்களால் காட்டப்பட்டுள்ள விடயங்கள்
1) கோகர்ண, ஜம்புகோளப்பட்டினம், கொடவாய, களனி.
2) கோகரணன, ஜம்புகோளப்பட்டினம், களனி, மகாதித்த.
3) தேவநகரம், கொடவாய, களனி, கோகர்ண.
4) மகாதித்த, காலி, கோகர்ண, தேவநகரம்.

19) பத்தகச்சானா வந்திறங்கி துறைமுகத்தை குறிக்கும் இலக்கம்
1) 2 2) 1 3) 4 4) 5

20) மல்வத்து ஓயாவைக் குறிக்கும் எழுத்து
1) A 2) B 3) C 4) D

21) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்திறங்கிய துறைமுகம்
1) A 2) B 3) C 4) D

22) பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கு காரணமான ஆக்கிரமிப்பாளன்
1) ராஜேந்திரசோழன் 2) ராஜராஜ சோழன்
3) கலிங்கமாகன் 4) சென்ஹோ

23) இலங்கைக்கு வருகை தந்த முதல் மேலைத்தேயத்தவர்
1) ஒல்லாந்தர் 2) ஆங்கிலேயர்
3) போர்த்துக்கேயர் 4) அராபியர்

24) பிரான்சியப் புரட்சி நடைபெற்ற ஆண்டு
1) 1789 2) 1932
3) 1800 4) 1760

25) ஜேர்மனியை ஒன்றுபடுத்திய ஆண்டு
1) கி.பி. 1805 2) கிபி. 1871
3) கி.பி.1870 4) கி.பி1873

26) கம்சபா முறையை நீக்கிய முதல் யாப்புச் சீர்திருத்தம் எது?
1) டொனமூர் 2) மக்கலம்
3) கோல்புறுக் - கமறன் 4) சோல்பரி

27) முதலாளித்துவ பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய அமெரிக்க குடியரசு ஏற்படுத்திய அமைப்பு எது?
1) வோர்ஸோ 2) நேட்டோ
3) கெட் 4) யுனிசெப்

28) சூரியத்தொகுதி பற்றிய உண்மையை முதன்முதலில் உலகிற்கு கூறிய விஞ்ஞானி யார்?
1) கலிலியோ கலிலி 2) ஜொகன்னஸ் கெப்ளர்
3) ஐசக் நியூட்டன் 4) நிக்கலஸ் கொப்பணிகஸ்

29) தலதா மாளிகைக்குரிய புனித தந்ததாதுவை இலங்கைக்கு கொண்டு வந்து பிரதிட்டை செய்தபோதிருந்த ஆட்சியாளன் யார்?
1) மகாசேனன் 2) கித்சிரிமேவன்
3) வலகம்பா 4) தாதுசேனன்

30) பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புடைய எண்ணக்கருவை வெளியிட்டவர்.
1) ரூசோ 2) டோல்ஸ்டோய்
3) கரிபால்டி 4) ஜோசப் மசினி

31) உலகயுத்தத்தின் முடிவில் உலகில் பலம் வாய்ந்த நாடுகள் இரண்டு
1) இங்கிலாந்து, பிரான்ஸ்
2) ஜப்பான், ஜேர்மனி
3) ஒஸ்திரியா, ஹங்கேரி
4) ஐக்கிய அமெரிக்க குடியரசு, சோவியத் ரஷ்யா

32) i ஆம் ii ஆம் மலையக ஆக்கிரமிப்புகளுக்கு தலைமை வகித்த பிரித்தானிய ஆளுநர்கள்
1) பிறவுண்றிக் - மெயிட்லன்ட் 2) நோர்த் - பிறவுண்றிக்
3) மெக்டோவல் - ஸ்மேலி 4) நோர்த் - கிறகரி

33) 1 பத்தோலமியூ டயஸ் A இந்தியா
2. அமெரிக்கோ வெஸ்புச்சி B நன்னம்பிக்கைமுனை
3. கொலம்பஸ் C அமெரிக்கா
4. வஸ்கொடகாமா D ஹிஸ்பேனியாலோ
1) BCDA 2) ABCD
3) CBDA 4) DACB

34) ஜப்பானிய பேரரசனான முட்ஷுகிதோவால் 1871 இல் ஜப்பானில் ஏற்பட்ட முக்கிய மாற்றமாவது
1) ஜப்பானிய கதவுகளை வெளிநாடுகளுக்காகத் திறந்த விட்டமை.
2) புதிய யாப்புச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தியமை.
3) நடைமுறையிலிருந்த மானிய முறையை நீக்கியமை.
4) கிறிஸ்தவ மதத்தை நாடியவர்களை அழித்தமை.

35) "நாடுகளுக்கு சுதந்திரம் அவசியம், இனங்களுக்கு விடுதலை அவசியம், மக்களுக்கு புரட்சி அவசியம்" எனும் பிரகடனத்தின் மூலம் சீன மக்களுக்கு தைரியத்தை ஏற்படுத்தியவர் யார்?
1) பிரமதர் வோ என் - லாய் 2) யுவாங்சிகாய்
3) சுன் - யாத் - சென் 4) சீயெங்காய்ஷேக்

36) II ஆம் உலக யுத்தத்தின் முடிவில் தமது குடியேற்றவாதத்திற் குட்பட்டிருந்த நாடுகளுக்கு சுதந்திரம் வழங்குவதும் இடம்பெற்றது. அவ்வாறு சுதந்திரம் வழங்கிய நாடுகளாவன
1) ஜேர்மனியும் பிரான்சும் 2) சீனாவும் வியட்னாவும்
3) ரஷ்யாவும் ஜப்பானும் 4) பிரித்தானியாவும் பிரான்ஸும்

37) II ஆம் உலக யுத்தத்தால் அழிவுற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் உதவி வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு எது?
1) நேட்டோ அமைப்பு 2) சியாட்டோ அமைப்பு
3) மார்ஷல் திட்டம் 4) வோர்ஸோ அமைப்பு

38) இலங்கை நாடாளுமன்றத்தில் காணப்பட்ட இருசபை முறைகளைக் கொண்டமுறை எச்சீர்திருத்தத்தின்படி நீக்கப்பட்டது?
1) கி.பி 1931 2) கி.பி 1947 3) கி.பி 1972 4) கி.பி.1978

39) ரஷ்யாவின் போல்ஷவிக் கட்சியின் தலைவர்
1) II ஆம் அலெக்சாந்தர் 2) மகாபீட்டர்
3) III ஆம் அலெக்சாந்தர் 4) VI லெனின்

40) தொழிற்பிரிப்பு எனப்படுவது
1) பல்வேறு உற்பத்திகளில் ஈடுபடல்
2) ஒரு முடிவுப்பொருளைப் பெறுவதற்காக அதன் பகுதிகளை வெவ்வேறிடங்களில் உற்பத்தி செய்தல்.
3) உணவுப் பொருட்களின் உற்பத்திகள்
4) பலவாறாகப் பிரிக்கப்பட்ட தொழில் முயற்சிகள்.

## பகுதி II

**A**

கீழே "அ" பகுதியிலுள்ளவற்றை இலங்கைப் படத்திலும் "ஆ" பகுதியிலுள்ளவற்றை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(அ) மகாவலிகங்கை, யாழ்ப்பாணம், களுகங்கை, யாப்பகூவ, அனுராதகம, தீகவாபி, மாத்தறை, மகாகம, மகாதித்த, கற்பிட்டி.

(ஆ) விஜயநகர், பையர், பேர்ளின், செங்கடல், பாருகச்ச, நன்னம்பிக்கை முனை, ஜிப்ரோல்டர் தொடுகடல், பிறேசில்.

**B**



(i) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தேரரைப் பெயரிடுக.

ii) அவர் நடத்திய பஞ்சமகா விவாதங்களில் ஒன்றினைப் பெயரிடுக.


iii) ஹென்ரி ஸ்டீல் ஒல்கொட் இலங்கைக்கு வருகை தருவதற்குக் காரணமாயமைந்த விவாதம் எது?



02)
i) இச்செதுக்கல் என்ன பெயரால் அழைக்கப்படுகிறது?
ii) எந்த வழிபாட்டிடத்தில் இதனைக் காணலாம்?
iii) இக்கலைப்படைப்பு எவ் இந்திய கலாசாரத்தை ஒத்துள்ளது?

1) இலங்கைப் புறவுருவப்படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.
அனுராதகம, மகாதித்த, நல்லூர், மகாகம, தீகவாபி, வெல்லஸ்ஸ, களுத்துறை, சத்கோறளை, கோகண்ண, மகியங்கனை.

2) உலகப்புறவுருவப்படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.
ரோம், லிஸ்பன், தாம்ரலிப்தி, டோக்கியோ, கேன்டன், நன்னம்பிக்கைமுனை, கொன்ஸ்தாந்திநோபிள், பனாமாகால்வாய்.



02) 1) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள விடயம் யாது?
2) இதனை நிர்மாணித்த மன்னன் யார்?
3) நிர்மாணித்தமைக்கான காரணம் யாது?
4) எந்நாட்டில் அமைந்துள்ளது?

**03) அடைப்பினுள் இருந்து சரியான விடைகளைத் தெரிந்து எழுதுக.**
1) இலங்கைக்கு பௌத்த மதத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
2) தென்னிந்திய எழு திராவிடர் குழுவின் ஆக்கிரமிப்பின்போது வலகம்பா மன்னனுக்கு பிரச்சினையை ஏற்படுத்தியவன் யார்?
3) சீகிரிய ஓவியங்கள் எக்கலை சம்பிரதாயத்தைப் பிரதிபலிக்கிறது?
4) அடால்ப் ஹிட்லரின் எண்ணங்களின் தொகுப்பு என்ன பெயரால் அழைக்கப்படுகிறது?
(மெயின்காவிப் / மறுபிறப்பு / மகிந்ததேரர் / தீய / குப்த /மௌரிய)

04)
1) முசோலினியின் கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்சி எது?
2) இறுதி இராப்போசனம் எனும் சித்திரத்தை வரைந்தவர் யார்?
3) மேற்கிந்தியத் தீவுகளை நோக்கிப் பயணம் செய்த ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த முதல் நாடுகாண் பயணி யார்?
4) II ம் உலக யுத்தத்தின் பின்னர் சமாதானத்திற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய நாட்களில் வெளியான பரீட்சை வினாத்தாள்களின் விடைகள்

**28 செப்ரெம்பர் 2014 ஞாயிற்றுக்கிழமை**

01.  2.  3. 3 B யும் E யும் 4. 3 D யும் E யும்
5. 3 இரவில் சுறுசுறுப்பாக இருத்தல் 6. 1 பழங்களை உணவாகக் கொள்ளல்
7. 2 தென்றல் காற்று
8. 3 சூழலில் மரம் கொடியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி
9. 1 தானியம், கரட் 10. 1 வண்டி, பருந்து
11. 2 பாடசாலைக்கு 12. 3 பார்டினார்
13. 2 22 14. 2 ●
15. 1  16. AH 17. 2 806
18. 3 HOT 19. 2 | 5 | 7 | 9 |
20. 2 திங்கட்கிழமை, புதன்கிழமை 21. 2 SFC
22. 2 ELM 23. 3 14

**01 ஒக்டோபர் 2014 புதன்கிழமை**

01)
1. மாணவப் பருவம்
2. கருத்தூன்றி
3. பிரயோசனம்
4. அரியது
5. நல்ல நண்பன்
6. நல்ல / நல்

02)
1. வாழ்
2. அறியாமல்

1. பொன்விழா
2. குரவர் / ஐங்குரவர் / ஐம்பெருங்குரவர் / ஐங்குரவர்கள்/ ஐம்பெருங்குரவர்கள்/ குரவர்கள்
3. அகராதி

03)
1. இவை என்ன? இவை என்ன?
இவை யாவை? இவைகள் எவை?
இவைகள் யாவை?

2. நீங்கள் எனக்கு உதவ முடியுமா? / நீ எனக்கு உதவ முடியுமா? நீர் எனக்கு உதவ முடியுமா? /உன்னால் எனக்கு உதவ முடியுமா? / உங்களால் எனக்கு உதவ முடியுமா? / நீங்கள் எனக்கு உதவி செய்வீர்களா? / நீ எனக்கு உதவி செய்வாயா?

04)
PLEASE OPEN THE DOOR / Please open the door
OPEN THE DOOR PLEASE / open the door please

05)
1. HORSE / A HORSE - horse / a horse
2. PENCIL / pencil

06)
1. அற மகே பொத்த - அர மகே பொத்த
அற மகே பொத - அர மகே பொத

07)
இது எங்கள் வகுப்பு - இது எமது வகுப்பு - இது எம் வகுப்பு
இது எங்களுடைய வகுப்பு - இது எங்களது வகுப்பு - இது எங்களின் வகுப்பு
- இது எம்முடைய வகுப்பு

08)
1. மன்னன் 2. கோபம் 3. காடு

09)
1. உண்மை / வாய்மை/ சத்தியம் / மெய்
2. பொறாமை
3. தஞ்சம் / அடைக்கலம் / பாதுகாப்பு / சரண் / புகழ்

10) 3. வெட்சி 11) 2 நிலவேம்பு 12) 4 மரமுந்திரிகை , புலிநகம், ஒட்டுப்புல்
13) 2 பொருள் கொள்வனவு செய்யப்படும் கடை
14) 3 கறையான் 15) 4 தம்பி 16) 3 மிளகாய்
17) 2 விவசாயக் கைத்தொழில்
18) 2 இலங்கை ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தது
19) 3 அம்பலாங்கொடை 20) 1 வட்டவளை
21) 3 எண்ணெயாட்டுதல் 22) 4 சீவுளி 23) 2 அரம்
24) 2 வேட்டைக்காரன் 25) 4 செங்கண்மாரி
26) 1 கலாவாவி
27) 2 கலாநிதி சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா
28) 4 காதுகாக்கப்படாத புகையிரக் கடவை முன்னால்
29) 2 கானாங்கோழி 30) 
31) 1 நரம்புத் தையல்
32) 3 செய்திப் பத்திரகை
33) 2 பருப்பு

வெள்ளிக்கிழமை வெளியான பரீட்சை வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்







யாழ் இந்தியத் துணைத் தூதரகமும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்துடன்(EDCIL) இணைந்து நடாத்திய உயர் கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த புதன்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் யாழ் இந்தியத் துணைத் தூதுவர் கிருஸ்ணமூர்த்தி உரையாற்றுவதையும், செயலமர்வு நடைபெறுவதையும் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

# தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு
# கிளி.மாவட்டத்தில் 164 பேர் சித்தி

(கிளிநொச்சி)

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 164 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி குழுவின் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன. இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் கோட்ட ரீதியான தரவுகள் வருமாறு,**

கரைச்சி

கிளி/கிளிநொச்சி ம.வித்தியாலயத்தில் 33 பேரும், கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் 14 பேரும், கிளி/சென். திரேசா பெண்கள் கல்லூரியில் 18 பேரும், கிளி/இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் 7 பேரும், கிளி/கனகபுரம் ம.வித்தியில் 6 பேரும், கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் 5 பேரும், கிளி/விவேகானந்தா வித்தியாலயத்தில் 4 பேரும், கிளி/அன்னை சாரதா வித்தியாலயத்தில் 3 பேரும், கிளி/செல்வாநகர் அ.த.க பாடசாலையில் 3 பேரும், கிளி/புனித பற்றிமா றோ.க.த.க (பாடசாலையில் 3 பேரும், கிளி/உருத்திரபுரம் ம.வி.யில் 2 பேரும், கிளி/ [...]வநகர் அ.த.க. பாடசாலையில் 2 பேரும், கிளி/இராமநாதபுரம் ம.வி.2 பேரும், கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையில் 2 பேரும், கிளி/திருவையாறு ம.வி.யில் 2 பேரும், கிளி/மாயவனூர் அ.த.க. பாடசாலையில் ஒருவரும், கிளி/ஸ்கந்தபுரம் இல - 01 இல் 2 பேரும், கிளி/ஸ்கந்தபுரம் இல - 02 இல் ஒருவரும், கிளி/அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் ஒருவரும், கிளி/யூனியன் குளம் அ.த.க. பாடசாலையில் ஒருவரும் கிளி/கனகாம்பிகைக் குளம் அ.த.க. பாடசாலையில் ஒருவரும், கிளி/வன்னேரிக் குளம் ம.வி.யில் ஒருவரும் கிளி/வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலையில் ஒருவரும், கிளி/வன்னேரி ஐயனார் வித்தியாலயத்தில் ஒருவருமாக மொத்தம 116 பேர் சித்தியடைந்துள்ளனர்.

கண்டாவளை

கிளி/தருமபுரம் இல 01 இல் 7 பேரும், கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தில் 6 பேரும், கிளி/மயில்வாகனபுரம் அ.த.க. பாடசாலையில் 4 பேரும், கிளி/அம்பிகை வித்தியாலயத்தில் 2 பேரும், கிளி/பிரமந்தனாறு ம.வித்தியாலயத்தில் 2 பேரும், கிளி/பரந்தன் இந்து ம.வித்தியாலயத்தில் 2 பேரும், கிளி/கல்லாறு அ.த.க பாடசாலையில் ஒருவரும், கிளி/தட்டுவன் கொட்டி கண்ணகையம்மன் அ.த.க பாடசாலையில் ஒருவரும், கிளி/புன்னை நீராவி வித்தியாலயத்தில் 3 பேரும், கிளி/புனித அந்தோனியார் வித்தியாலயத்தில ஒருவருமாக மொத்தம் 29 பேர் சித்தியடைந்துள்ளனர்.

பூநகரி

கிளி/வலைப்பாடு அ.த.க. பாடசாலையில் 2 பேரும், கிளி/முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்தில் 2 பேரும், கிளி/கரியாலை நாகபடுவான் இல 02 இல் ஒருவரும், கிளி/கறுக்காய்த்தீவு அ.த.க பாடசாலையில் ஒருவரும் கிளி/பூநகரி ம.வித்தியாலயத்தில் ஒருவருமாக மொத்தம் 7 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி

கிளி/பளை மத்திய ஆரம்ப வித்தியாலயம் 8, கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலை 2, கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை கிளி/கிளாலி அ.த.க. பாடசாலை ஒருவருமாக மொத்தம் 12 பேர் சித்தியடைந்துள்ளனர்.

# பூட்டியிருந்த வீட்டில் திருடர்கள் கைவரிசை

மானிப்பாய் நவாலி கிழக்கு முருகமூர்த்தி கோவில் பகுதியில் உள்ள பூட்டியிருந்த வீட்டில் 1 இலட்சத்து 50 ஆயிரம ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் வசிப்பவர்கள் தமது வீட்டிற்கு அருகில் புதிதாக நிர்மாணித்து வரும் வீட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு உறங்கிக் கொண் டிருந்த சமயமே இத்திருட்டு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் குறித்த வீட்டிற்கு இன்னமும் மின்சாரம் பெறாமையால் திருடர்களை பிடிக்க முடியாமல் போனதாக வீட்டு உரிமையாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸார் இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முதியோர் தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு கடந்த புதன்கிழமை நெல்லியடி ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கங்கார தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதியோர்கள், சிறுவர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் முதியோர் இல்லத்திற்கு பொறுப்பானவர்களும் கலந்து கொண்டனர். (18)

# சிறந்த மருத்துவராகி ஏழை மக்களுக்கு உதவுவேன்

(யாழ்ப்பாணம்)



எதிர்காலத்தில் மருத்துவராக வந்து ஏழை மக்களுக்கு சேவையாற்றுவதே எனது இலட்சியம் என புலமை பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் முதல் நிலையிலுள்ள மாணவன் வின்சன் துரைரட்ணம் செலஸ்ரின் தெரிவித்துள்ளார்.

இம் மாணவன் தனது வெற்றி பற்றிக் குறிப்பிடுகையில், எனது இவ்வெற்றிக்கு எனது தாய் தந்தையின் ஒத்துழைப்பே காரணமாக அமைந்தது. தொடர்ந்தும் உயர்கல்வியைக் கற்று சிறந்த மருத்துவராக வந்து நான் பிறந்து வளர்ந்த பொலிகண்டியிலுள்ள ஏழை மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். இதுவே எனது நீண்ட கால வரலாற்றின் இலட்சியமாகும்.

மேலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய ஆக்கமும் ஊக்கமும் தந்த பாடசாலை அதிபர், வகுப்பாசிரியரான கி.சந்திரகுமார் மற்றும் தனியார்கல்வித்துறை ஆசிரியர் எஸ்.யசீதரன் சகமாணவர்கள் யாவருக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக கண்களாக விளங்கும் அம்மா அப்பாவுக்கும் என்வாழ்வின் தூணாகவிருக்கும் சகோதரர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியை இவர் தெரிவித்துக் கொண்டார் (116)

# இளைஞர் நாடாளுமன்றத்தின் 11 ஆவது அமர்வு மகரகமவில்

இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் 11 ஆவது அமர்வு எதிர்வரும் 10ஆம் 11ஆம் திகதிகளில் மகரகம ஸ்ரீலங்கா யூத் வளாகத்தில் அமைந்துள்ள இளைஞர் நாடாளுமன்றத்தில் இடம் பெறவுள்ளது. இம் அமர்வில் சிறுவர் தினத்தை அடிப்படையாக கொண்டு "பெண் பிள்ளையின் தனித்துவம் மற்றும் அவர்களது சவால்" உள்ளிட்ட விடயங்களில் விவாதம் இடம்பெறவுள்ளது.

சிறுவர்களின் தனித்துவம் மற்றும் அவர்களது சவால்களைப் பெற்றுக் கொள்வதற்கு பொருளாதாரம் சமூகம் மற்றும் சட்ட ரீதியான ஒதுக்குகள் போதுமானது என்பன சம்பந்தமாக விவாதிக்கப்படவுள்ளது. இவ் அமர்வின் முதல் நாளில் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ விருந்தினராக கலந்து கொள்வார்.

இரண்டாம் நாள் அமர்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகபெரும உள்ளிட்டவர்கள் கலந்து கொள்வார்கள். இவ் அமர்வுகளில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தாகவும் தேசிய இளைஞர் சேவைகள மன்ற அபிவிருத்தி பணிப்பாளர் சனத் வீரசூரிய கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (48)


வாழ்க வளமுடன்

பெயர் : க.வினோஜன்

முகவரி : அறிவாலயம் கரணவாய், கரவெட்டி.

அகவை 10 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்





வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

# பிரதமர் நரேந்திரமோடி பொறுப்புடன் செயற்படுகிறார்

## அத்வானி பாராட்டு



(ஆமதாபாத்)

இந்திய பிரதமர், நரேந்திர மோடி மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படுகிறார். ஒட்டு மொத்த நாட்டின் அபிமானத்தை பெற்றுள்ளார். எனினும், வாஜ்பாய் போன்றதொரு பிரதமரை இந்த நாடு இனிப் பார்க்க முடியாது, என, பா.ஜ.க மூத்த தலைவரான அத்வானி கூறினார்.

குஜராத் மாநிலம் ஆகமதாபாத்தில், பா.ஜ.க.வினர் கூட்டத்தில் பங்கேற்ற அத்வானி பேசியதாவது,

பிரதமராக நரேந்திர மோடி பொறுப்பேற்றதும், அவர் எப்படி பிறருடன் பழகப் போகிறார்... எவ்வளவு பெரிய பொறுப்பை அவர் எவ்வாறு ஏற்கவுள்ளார் என பலரும் பல விதமாக யோசித்தனர். அதை எல்லாம் தகர்க்கும் விதத்தில், பொறுப்புகளை எல்லாம் தோளில் சுமந்து அருமையாக செயற்படுகிறார்.

உள்நாடு மட்டுமின்றி வெளி நாடுகளிலும் அவரின் புகழ் பரவியுள்ளது. அவரின் செயற்பாடு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. அவர் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படுகிறார் ஒட்டுமொத்த நாடே அவரை போற்றுகிறது.

பிரதமர் பதவியில் இருப்பவர்கள், நாட்டை சிறப்பாக நிர்வகித்தால் போதும். எனினும் பிற நாடுகளுடனும் நல்லுறவு பேண வேண்டும். அதை மோடி சிறப்பாக செய்துள்ளார். தேர்தலில் அபரிமிதமான வெற்றி பெற்ற மோடி, ஒட்டுமொத்த உலகின் மதிப்பையும் பெற்றுள்ளார். என்றார்.

# ஈராக்கில் 5500 பேரை கொன்றது ஐ.எஸ்.ஐ.எஸ்




(பாக்தாத்)

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இஸ்லாமிய தேசம் என்ற புதிய நாட்டை உருவாக்கியுள்ளனர். அங்கு வாழும் மைனாரட்டிகளான யாஷிடி மக்தளை மதம் மாற கட்டாயப்படுத்துகின்றனர்.

மதம் மாற மறுப்பவர்களை கொன்று குவித்து வருகின்றனர். பலர் தீவிரவாதிகளிடம் இருந்து தப்பிக்க அங்கிருந்து வெளியேறி விட்டனர். கடந்த ஜூன்மாதம் முதல் இது வரை அங்கு 5500 பேரை தீவிரவாதிகள் கொன்றுள்ளனர். இந்த தகவலை ஐ.நா.வின் ஈராக் பிரதிநிதி நிகோலே மிலாடெனோவ் தெரிவித்துள்ளார்.

# மரணத் திகதியை அறிவிக்கும் கடிகாரம்




(டுபாய்)

இந்தக் கடிகாரத்தை பார்க்கும் போது எல்லாம் நமக்கு வாழ் நாள் இவ்வளவுதான் அதனால் நாம் எல்ல வேலையையும் சிறப்பா செய்யனும், இன்னும் நிறைய சாதிக்க தோன்றும் என்கிறார் இதன் தயாரிப்பாளர். அந்த கடிகாரந்தான் டிக்கர் என்ற பெயருடன் புதிதாக சந்தைக்ககு வந்துள்ளது.உதாரணமாக 41 வருடம், 3 மாதம், 4 நாள், 7 மணிநேரம், 5 நிமிடம், 19 நொடியில நீங்க இறந்து விடுவீர்கள் என்று காட்டும். பெட்ரிக் கோல்டிங் என்பவர் இந்த கடிகாரத்தை தயாரித்துள்ளார். இப்படி டெரரான ஒரு கடிகாரத்தை அறிமுகப்படுத்திய பெட்ரிக் கோல்டிங் கூறியதாவது, மனித வாழ்க்கையில இறப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்று, ஆனால் நம்ம எல்லாரும் நமக்கு இருக்குற இந்த விலை மதிப்பில்லாத நேரத்தை சரியா பயன்படுத்துவது இல்லை என்று தெரிவித்தார்.

இந்தக் கடிகாரம் இன்றைய சந்தை மதிப்பில் ஒன்லைனில் 79 அமெரிக்க டொலர்களுக்கு கிடைக்கிறது. சந்தை மதிப்பில் ரூபாய் 4,871.26 இற்கு கிடைக்கிறது என இதன் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளர்கள்.

# விசேட கவனிப்பை மறுத்தார் ஜெயலலிதா



(சென்னை)

சிறையில் உள்ள ஜெயலலிதா தனக்கென சொகுசு வசதிகள் ஏற்படுத்தித் தருமாறு எவ்வித நிபந்தனையும் வைக்கவில்லை எவ்வித வி.ஐ.பி வசதியும் கோரவில்லை என கர்நாடக சிறைத்துறை டி.ஐ.ஜி ஜெய்சிம்ஹா ஜெயலலிதாவின் வியக்கவைத்த அணுகுமுறை குறித்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, ஜெயலலிதா. பரப்பன அக்ரஹார சிறையில் உள்ள மற்ற கைதிகளைப் போலவே அவரும் நடத்தப்படுகிறார்.

சிறைக்காவலர்கள், அதிகாரிகளிடம் அவர் மிகவும் நாகரிகமாக நடந்து கொள்கிறார். மருத்துவர்கள் அறிவுறுத்தியதால் இரும்புக் கட்டில் வேண்டும் எனக கேட்டார். அது மட்டுமே அவர் முன் வைத்த கோரிக்கை. தொலைக்காட்சி வசதிகூட அவர் கேட்கவில்லை. ஜெயலலிதா கடுங்காவல் தண்டனை பெற்றவர் இல்லை என்பதால் அவர் விருப்பப்படியே அவரது உடைகளையே அணிய அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மகிழ்ச்சியுடன் அவர் சேலை உடுத்தியிருக்கிறார். மற்ற எந்த ஒப்பனைகளையும் அவர் செய்து கொள்ள வில்லை.

ஜெயலலிதாவுடன் சிறையில் அடைக்கப்பட்ட சசிகலா, இளவரசி ஆகியோரும் அடுத்தடுத்த அறைகளிலேயே இருப்பதால் அவர்கள் இருவரும் ஜெயலலிதாவை கவனித்துக் கொள்கின்றனர். என்றார்.

## உலகச் செய்திகள்

# அணையாதிருக்கும் தீபம்




இந்தியா பீகாரில் உள்ள துர்க்கா பரமேஸ்வரி கோயில் ஒன்றில் 101 ஆண்டுகளாக தொடர்ந்து தீபம் எரிந்து கொண்டுள்ளது. பீகார் மாநில தலைநகர் பாட்னாவில் உள்ள அகண்ட் வாஷினி கோயிலில் துர்க்கா தேவி முக்கிய தெய்வம்.

1914ஆம் ஆண்டு யூன் மாதம் அசாமில் இருந்து ஒரு தீபத்தை கொண்டுவந்து துர்க்கா தேவி சிலை முன்பு தீபமேற்றி வைத்தனர். இன்று வரை அந்தத்தீபம் சுடரொளியுடன் எரிந்து கொண்டுள்ளது. தற்போது இந்தக் கோயிலின் பூசாரியாக இருப்பவர் பசுகினத் திவாரி. அவரது தாத்தா, விஸ்வநாத் திவாரிதான் இந்த தீபத்தை முதலில் ஏற்றியவராம். மூன்று தலைமுறைகளாக தீபத்தை அணையாமல் பார்த்துக கொள்கின்றனர்.

# ஜெயாவுக்கான நீதிமன்றத் தீர்ப்பை ஆளும் கட்சியினர் அவமதிக்கக்கூடாது

## விஜயகாந்த் தெரிவிப்பு



(சென்னை)

ஜெயலலிதா ஊழல் செய்தார் என நிரூபிக்கப்பட்டதை, திசைதிருப்பி, பொது மக்களிடத்தில், இத்தீர்ப்பு குறித்து ஒரு மாயதோற்றத்தை உருவாக்க அ.தி.மு.க.,வினர் முயற்சி செய்கிறார்கள். இச்செயல்கள் அனைத்தும், நீதிமன்ற அவமதிப்பாகும்"" என, தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சொத்துக் குவிப்பு வழக்கில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு எதிராக, பெங்களூர் நீதிமன்றில் அளித்த தீர்ப்பின் விளைவாக, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. அ.தி.மு.க., நிர்வாகிகளும், தொண்டர்களும் தொடர்ந்து பொதுமக்களுக்கும், பொதுச்சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தி சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதற்கெடுத்தாலும், 144 தடை உத்தரவு போடும் அ.தி.மு.க., அரசு, மிகப்பெரிய அளவில் அசம்பாவிதங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் நடைப்பெறறும் அந்த தடை உத்தரவை அமுல்படுத்தவில்லை. காவிரி பிரச்சினைக்காக, ஜெயலலிதா போராடியதால்தான் அவரை பழிவாங்க கன்னடர் என்ற முறையில் நீதிபதிகடும் தண்டனை வழங்கியதாக ஆளும் கட்சியினர் உள்நோக்கத்தோடும், விஷமத்தனமாகவும் கூறி வருகின்றனர் என்றார்.

# ஜப்பானில் நிலநடுக்கம் 5.5 ரிக்டர் பதிவு

ஜப்பானில்நேற்று வெள்ளிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கத்தின் தாக்கம் 5.5 ஆக பதிவாகியுள்ளது.

நிலநடுக்கம் தொடர்பாக சினுவா செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், வடகிழக்கு ஜப்பானின் இவேட் ப்ரீ:.பெக்சூர் பகுதியில் நிலநடுக்கம் மையம் கொண்டிருக்கிறது. ஆனால் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேத விபரங்கள் குறித்து உடனடியாக தகவல் ஏதும் இல்லை என்று ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# காஷ்மீர் சட்டப்பிரச்சினைக்கு பொதுவாக்கெடுப்பு அவசியமானது

## பாகிஸ்தான் கோரிக்கை

காஷ்மீர் ஒரு சட்டப் பிரச்சினை மற்றும் அதன் சட்ட நிலையை பொது வாக்கெடுப்பு மூலம் தீர்க்கப்பட வேண்டும் என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அலுவலக செய்தித்தொடர்பாளர் தஸ்நிம் அஸ்லாம் கூறியுள்ளார். இதன் மூலம் காஷ்மீரில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என பாகிஸ்தான் மீண்டும் இந்தியாவிடம் கோரிக்கை வைத்துள்ளது.

இது தொடர்பாக, இஸ்லாமாபாத்தில் வாராந்திர கூட்டத்தில் நேற்றுமுன்தினம் அந்நாட்டின் வெளியுறவுத்துறை அலுவலக செய்தித்தொடர்பாளர் தஸ்நிம் அஸ்லாம் கூறுகையில்,

காஷ்மீர் மக்களின் விருப்பத்தின்படி பொதுவாக்கெடுப்பு நடத்தியே காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். காஷ்மீர் விவகாரம் ஒரு சட்டப்பிரச்சினை. பொது வாக்கெடுப்பை வலியுறுத்தும் காஷ்மீர் மீதான ஐ.நா. தீர்மானத்திற்கு இந்திய-பாகிஸ்தான் பேச்சுவார்த்தை ஒரு மாற்றுத்தீர்வாக இருக்காது. இந்தியாவுடன் போடப்பட்ட சிம்லா ஒப்பந்தத்தினால் ஐ.நா. தீர்மானத்தை செயலிழக்க வைத்துவிட முடியாது. பாகிஸ்தான் உயர் காஷ்மீர் அப்துல் பாசித ஷரியத் தலைவர்களை சந்தித்தில் எந்த தவறும் இல்லை. பாகிஸ்தான் எப்போதுமே அவர்களிடம் ஆலோசனை நடத்துவது வழக்கம்.

# புனரமைக்கப்படுகிறது ஆனையிறவு உப்பளம்

## அமைச்சர் டக்ளஸ் களநிலையில் ஆராய்வு



ஆனையிறவு உப்பளத்தின் தொழிற்துறை நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

ஆனையிறவு உப்பளத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் புனரமைப்பு பணிகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது நாட்டில் அசாதாரண சூழ்நிலை காரணமாக அழிவடைந்த மற்றும் சேதமடைந்த உப்பள வயல்களின் வரம்புகள் தற்போது மீள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இயக்கச்சி, மாசார், இரத்தினபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து இப் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

அத்துடன் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டதும் நிறைவு செய்யபட வேண்டியதுமான வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது அங்கு புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் விசேட கவனம் செலுத்திக் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இதன் பிரகாரம், முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வரும் பகுதிகளில் தற்காலிக கொட்டகைகளையும், மலசலகூடங்களையும் உடனடியாக நிர்மாணிக்குமாறு அமைச்சர் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் உடனிருந்தார்.

# எதிர்பார்த்த பதவி உயர்வுகள் வருட இறுதிக்குள் கிடைக்கும்

## இது அதிபர்கள், ஆசிரியர்களுக்கு

பல வருடங்களாக ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு வழங்கப்படாத பதவியுயர்வு இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு லும்பினி வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், விசேட நடமாடும் சேவையினூடாக சுமார் 217,000 ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

யுனெஸ்கோ நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவராக தென்னாசியவின் ஆசிரியர் அபிவிருத்தி மத்தியநிலையத்தை இலங்கையில் நிறுவ சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

1977 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையினூடாக சம்பிரதாய பூர்வமான விவசாய பொருளாதார முறைமைக்குப் பதிலாக கைத்தொழிலாக மாறியுள்ளது. அதனூடாக கைத்தொழில் வலயங்கள் உருவாக்கப்பட்டன.

இதனூடாக கணிதத்தில் சித்தியடையாத ஒருபகுதினர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். தாய்மார் வீட்டு வேலைக்கு அனுப்பப்பட்டனர். இதற்கு நிபுணத்துவம் இன்மையே காரணம். கல்வியின்மையின் காரணமாகவே கைத்தொழிலினூடாக வாழ்க்கையை கொண்டு செல்லவேண்டியுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ஒஷார பண்டிரத்ன உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## முன்னிப்புச் சபை...

க்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது.

எனினும், இந்த அறிக்கை தொடர்பில் பதற்றமடைய வேண்டிய அவசியம் கிடையாது என இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹானா மஹேவா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 112 ஆம் கால மீளாய்வு அமர்வுகள் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளன.

இந்த அமர்வுகளில் எதிர்வரும் 7 ஆம் மற்றும் 8 ஆம் திகதிகளில் இலங்கை விவகாரம் பற்றி பேசப்படவுள்ளது.

அமர்வுகளில் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது வழமையானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அறிக்கைகளில் எத்தனை பக்கங்கள் காணப்படுகின்றன என்பதனை விடவும் அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் மெய்தானா என்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கால மீளாய்வு அமர்வுகளில் எழுப்பப்படும் கேள்விகள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு ஒவ்வொன்றாக பதிலளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது வெறுமனே ஓர் அறிக்கை எனவும் அது பற்றி அதிகளவில் குழம்ப வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையின் உள்ளடக்கம் பற்றியே அதிகளவில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க இலங்கை எப்போதும் தயாராகவே உள்ளளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆயுதம்...

யாது. ஆகவேதான் நான் தமிழரசுக் கட்சியைச் சார்ந்திருக்கின்றேன் என்று கூறினார். இதற்கு ஏனைய மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இந்தக் கருத்தானது உங்கள் மீது வைத்திருக்கின்ற மதிப்பை மலினப்படுத்துவதாக இருக்கின்றது என அவர்கள் குறிப்பிட்டதுடன், நீங்கள் இப்படியான ஓர் அபிப்பிராயத்தை வைத்திருக்கின்றவராக இருந்திருந்தால் நிச்சயமாக இதை நீங்கள் தேர்தலுக்கு முன்பே எங்களுக்கு கூறியிருக்க வேண்டும். தேர்தல் காலத்தில் பிரபாகரன், மாவீரன் போன்ற வார்த்தைகளைப் பிரயோகித்து வாக்கு வேட்டையில் ஈடுபட்டிருக்கக் கூடாது, இப்படியான செயல்களைச் செய்துவிட்டு இன்று நீங்கள் இப்படிக் கூறுவது, ஒரு யோக்கியமான அரசியலாகத் தெரியவில்லை என்று சுட்டிக்காட்டினார்கள். அத்துடன், கூட்டத்திலே வட மாகாணசபையின் நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் உறுப்பினர்களுடைய பிரச்சினைகள் போன்றவை தொடர்பிலும் ஆராயப்பட்டன.

குறிப்பாக வடமாகாண அமைச்சர்க்ள் கூடத் தங்களுடைய செயற்பாடுகளில் கூடுதலாக தத்தமது கட்சிகளைச் சார்ந்த நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகிறார்களே தவிர ஒரு கூட்டமைப்பு என்கின்ற பொதுவான நிலைப்பாட்டை எடுப்பதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டும் அங்கு முன்வைக் கப்பட்டது. இக்கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், தமிழரசுக் கட்சி சார்பில் நடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் புளொட் சார்பில் கந்தையா சிவநேசன் (பவன்), வடமாகாண அமைச்சர்கள் பொ.ஐங்கரநேசன், டெனீஸ் வரன், ப.சத்தியலிங்கம், த.குருகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# சுகாதார அமைச்சில் மோசடி; ஜே.வி.பி. முறையீடு

சுகாதார அமைச்சின் முக்கிய அதிகாரிகள் மூவர் இணைந்து 47 கோடி ரூபாவை மோசடி செய்துள்ளனர் என இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக் குழுவிடம் ஜே.வி.பி. முறையிட்டுள்ளது. "ஜிகா" ஜப்பானிய நிறுவனம் நீரிழிவு நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு, மற்றும் சி.ரி.ஸ்கான் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக 77 கோடி ரூபாவை அன்பளிப்பாக வழங்கியது. ஆனால் இந்த நிதியில் 30 கோடி ரூபாவுக்கு மட்டுமே இந்த இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மீதியான 47 கோடி ரூபா கையாடப்பட்டுள்ளது. இதில் சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் பாலித மஹபால உட்பட மேலும் இருவர் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும் ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

## கிளிநொச்சிக்கு...

ளது. இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் நகரை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களும் மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்களும் வறட்சியான காலங்களில் குடிநீரை பெற்றுக் கொள்வதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் இம் மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபை பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை முன்னெ டுத்து வருகின்றது.

இதன்பிரகாரம் கிளிநொச்சிக்கு வருகை தந்த அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, கிளிநொச்சி நகரம், பரந்தன், வட்டக்கச்சி, அக்கராயன், பூநகரி ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் நேரில் ஆராயவுள்ளார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவரு மான முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஈ.பி.டி.பி.யின் வடமாகாண உறுப்பினர் தவநாதன் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சினது துறைசார்ந்த அதிகாரிகளும் உடனிருந்தனர்.

## புதிய கிராம....

மாதம் வழங்கப்பட்டன.

அவர்களுடன், ஏனைய 33 கிராம அலுவலர்களுக்கும் இந்த நியமனக் கடிதங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

மற்றைய 33 கிராம அலுவலர்களுக்கு பயிற்சி நெறிக்கான ஆரம்பக் கலந்துரையாடல், நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்ட பின்னர் நடைபெறுமென்றும் அரசாங்க அதிபர் மேலும் கூறினார். (25)

## அத்துமீறும்...

பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகாண முடியும் என்ற கருத்து இலங்கைத் தரப்பினால் முன்வைக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. இதேசமயம் 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை எதிர்வரும் ஒக்ரோபர் 10 ஆம் திகதி இந்தியாவுடன் பாதுகாப்புத் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடவிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரிலிருந்து...

கொன் நிறுவன முகாமையாளர் ஜெயசங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த ரயில் பாதை அமைக்கப்படுவதன் மூலம் இலங்கை-இந்திய கப்பல் சேவையை ஆரம்பிக்க ஏதுவாக அமையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர், தலைமன்னார் வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட ரயில் சேவையின் ஊடாக இலங்கை-இந்திய கப்பல் சேவையும் சுமூகமாக இடம்பெற்று வந்தமையை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## புங்கன்...

உள்ள வீட்டுக் காணியினை, வீட்டைப் பராமரிப்பவர்கள் கடந்த புதன்கிழமை துப்புரவு பணியினை மேற்கொண்ட போது, இந்தக் கைக்குண்டு இருந்துள்ளது.

வீட்டு பராமரிப்பாளர்கள் யாழ்ப் பாணம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததை தொடர்ந்து, இராணுவத்தின் குண்டு செயழிழக்கும் பிரிவினர் குண்டினைச் செயலிழக்க வைத்துள்ளனர். (25)

## சுற்றுலா...

சிறப்புக்களைக் கொண்டுள்ளது. இங்கு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு நட்சத்திர ஹோட்டல்களை நிர்மாணிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் மூலம் அப்பகுதி சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்படும்.

இதன் மூலம் நெடுந்தீவில் வாழும் சுமார் ஆயிரத்து 500 குடும்பங்களின் பொருளாதார நிலை வளர்ச்சி பெறும் என்றும் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்.

## பாப்பரசரை...

செய்யவிருக்கின்ற பாப்பரசர் பிரான்சிஸை ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ ரோமில் சந்தித்து இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான உத்தியோக பூர்வ அழைப்பிதழைக் கையளித்தார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் பாப்பரசர், ஜனவரி மாதம் 14ஆம் திகதி காலி முகத்திடலில் காலை 8.30 இற்கும் அன்று பிற்பகல் 2.00 மணிக்கு மடுமாதா தேவாலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுப்பார் என்று கொழும்பு பேராயர் இல்லத்தினால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இலங்கை குறித்த அமெரிக்க கொள்கை மாற்றம் எதுவுமின்றி தொடர்கிறது

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தகவல்

இலங்கை தொடர்பான அமெரிக்க நிலைப்பாட்டில் மாற்றம் தெரிவதாக வெளியான செய்திகளை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

அமெரிக்காவின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் தளர்ச்சி தெரிவதை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெரியுடனான சந்திப்பின்போது தான் உணர்ந்தார் என அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார் என வெளியான செய்திகளையே அமெரிக்கா நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் வெளிவிவகார பேச்சாளர் ஜென் சகி தெரிவித்துள்ளதாவது,

இலங்கை ஊடகங்களில் வெளியான தகவல்களில் ஒரு விடயம் மாத்திரம் சரியானது. வெளிவிவகார அமைச்சர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத் தொடரின்போது இலங்கை ஜனாதிபதியை சந்தித்தார். இலங்கை தொடர்பான அமெரிக்க கொள்கையில் மாற்றமெதுவும் இல்லை என்ற நோக்கத்தை தெரியப்படுத்தும் நோக்குடனேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

நிச்சயமாக இலங்கை தொடர்பான கொள்கையில் தளர்ச்சியேற்படவுமில்லை. இலங்கையுடனான எமது உறவு முழுமையாக வளர்ச்சி காணவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இலங்கை தனது பல தரப்பட்ட இன, மத குழுக்களுக்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுத்தாலே சாத்தியமாகும். இதன் காரணமாகவே இலங்கை தொடர்ந்தும் யுத்தத்தில் ஈடுபட்டிராத நாடு என்பதை காண்பிக்கும் விதத்திலான அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என கோரிவலியுறுத்தினார். என்று தெரிவித்துள்ளார்.

# நோனிஸ் மீது நியுயோர்க்கில் தாக்கு ஜனாதிபதி விசாரணைக்கு உத்தரவு

## வாஸ் தாக்கவில்லையெனவும் பேட்டி



பிரித்தானிய தூதுவர் கலாநிதி கிரிஸ் நோனிஸ் மீது நியுயோர்க்கில் வைத்து மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் மற்றும் பிரித்தானிய தூதுவர்களுக்கு எதிராக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சேனுக செனவிரத்னாவினால் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு ஆகியன தொடர்பில் விசாரணைகளை நடாத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

பிரித்தானிய தூதுவர் கலாநிதி கிரிஸ் நோனிஸ் மீது நாடாளுமன்ற உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சின் எம்.பியுமான வாஸ் குணவர்த்தன தாக்குதல் நடத்தியதாக அவர், முறையிட்டுள்ளதுடன் தனது இராஜினாமாக் கடிதத்தையும் சமர்ப்பித்துள்ளார்.

இதேவேளை, தங்கள் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாக தனியார் தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ள சஜின் வாஸ் குணவர்த்தன எம்.பி, தான் பிரித்தானியத் தூதுவரைத் தாக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# உட்கட்சி முரண்பாடு உச்சம்; முடங்கியது பிரதேச சபை

## எதிர்க்கட்சித் தலைவர் வடக்கு முதல்வருக்கு கடிதம்

(மானிப்பாய்)

உட்கட்சி முரண்பாடு காரணமாக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் செயற்பாடுகள் நீண்டகாலமாக முடங்கியுள்ளன. ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலுவான முரண்பாடே இதற்கு காரணம்.

இவ்வாறு மானிப்பாய் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் வெ.அ.ஜோன்சன் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாகாண முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையை தங்களின் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பொறுப்பேற்றிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இச்சபையின் நிறைவுக்காலத்துக்கு இன்னும் எட்டு மாதங்களே இருக்கின்றன.

இச்சபையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரான வெலிச்ஜோர் அன்ரன் ஜோன்சன் ஆகிய நான் எதிர்க்கட்சித் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றேன்.

எமது சபையின் செயற்பாடுகள் நீண்ட காலமாகவே மக்களுக்கு பயனற்ற வகையிலேயே முடங்கிக்கிடக்கின்றது.

எமது சபையில் ஆளுங்கட்சியாக இருப்பவர்களுக்குள்ளே பிரச்சினைகள் இருக்கின்றன. முன்னர் எமது சபையின் தலைவராக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான அ.ஜெபநேசன் என்பவரை ஆளுங்கட்சி உறுப்பினர்களே ஊழல் குற்றச்சாட்டைக் கூறியும் சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கவில்லை எனக் கூறியும் அவரை தலைமைப் பொறுப்பிலிருந்து நீக்கினர்.

தற்போதைய சபைத்தலைவரான ச.சிவகுமார் என்பவர் மீதும் ஆளும் கட்சி உறுப்பினர் ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதோடு, சபை நடவடிக்கைகளையும் தொடர்ந்தும் குழப்பியடித்து வருகின்றனர்.

இதனால் சபையில் எவ்விதமான தீர்மானங்களையும் நிறைவேற்றிச் செயற்பட முடியாத நிலையே நீண்ட காலமாகத் தொடர்கின்றது. சபையின் ஆளுங்கட்சியினரே குழப்பம் விளைவிப்பதால் அதிகாரிகளும் விசனமடைந்துள்ளனர்.

எமது பிரதேச சபையினால் எமது பிரதேச மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைப்பதில்லை.

இவ்வாறான நிலையில் இன்னும் ஆறு மாதங்களே சபையின் நிறைவுக்காலத்துக்காக இருக்கின்ற காரணத்தினால் அதற்குள்ளாக எமது சபையை திறம்பட நடத்தி மக்களுக்கு முடியுமான பணிகளைச் செய்ய விரும்புகின்றோம்.

சபைத் தலைவர் மீது ஊழல் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தும் சக ஆளும் கட்சி உறுப்பினர்கள் உண்மையில் ஊழல் குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களை யாவது சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதுவும் இல்லாமல் குற்றம் சாட்டுவதும், சபை நடவடிக்கைகளை குழப்புவதையும் பார்க்கும்போது திட்டமிட்டே சபை நடவடிக்கைகளை நடத்த விடாமல் குழப்பியடிப்பதுபோல் உள்ளது.

எனவே இவ்விடயத்தில் தாங்கள் தலையிட்டு ஆளும் கட்சியினரிடையே உள்ள முரண்பாடுகளை தீர்க்கவேண்டும் எனவும் இருக்கக்கூடிய குறுகிய காலத்துக்குள்ளாவது எமது சபை மக்களுக்கு பயனுள்ள பணிகளை முன்னெடுக்க தாங்கள் ஆவணசெய்ய வேண்டும் எனவும் பிரதேச மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன். என அக்கடிதத்தில் எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இந்திய மீனவர்கள் 16 பேர் தொடர்ந்து விளக்கமறியலில்

## - றோலர் படகுகளும் தடுப்பு -

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் 16 பேர் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாதகல் மேற்கு காரைநகர் வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழில் நடவடிக்கையின் போது இலங்கை கடற்படையினரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட 16 இந்திய மீனவர்களே விடுதலை செய்யப்படாமல் உள்ளனர் எனவும் ஜனாதிபதியில் விசேட உத்தரவிற்கமைய இதற்கு முன்னர் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அவர்களது நான்கு றோலர் படகுகளும் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(பா)

# 1 ஆம் இடம் அளவெட்டி அருணோதயா

வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்ப பிரிவுப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்றிருந்த "செயற்பட்டு மகிழ்வோம்" விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டிகள் அண்மையில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றிருந்தன.

1 ஆம் இடத்தினை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், 2 ஆம் இடத்தினை சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயமும், 3 ஆம் இடத்தினை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (06)

# மீனவரின் சடலம் இந்தியாவுக்கு

(யாழ்ப்பாணம்)

தீவக கடற்பரப்பில் கரையொதுங்கி ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மையில் ஒப்படைக்கப்பட்டு உரிமை கோரப்படாத நிலையில் வைக்கப்பட்டிருந்த ஆணின் சடலம் இந்திய மீனவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தை இந்தியத் தூதரகம் பெறுப்பெடுத்து இந்தியாவிற்கு எடுத்துச் சென்று உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை செய்திகள் தெரிவித்தன.

இவ்விடயம் சம்பந்தமாக இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலையின் கண்காணிப்பாளருடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இன்று இந்தியத் தூதரக அதிகாரிகள் குறித்த மீனவரது சடலத்தை பொறுப்பேற்று இந்தியவிற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் உயிரிழந்தவரின் பெயர் விபரம் வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(பா)

# காணாமற்போனோர் விசாரணை; பொறிமுறை மீது கிளம்பும் கண்டனம்

வடக்கில் யுத்தகாலத்தில் காணாமற் போனவர்கள் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் குறித்து, அங்குள்ள அரச சார்பற்ற அமைப்பான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பெரும் கவலை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக ஆணைக்குழுவின் விசாரணைகளில் சாட்சியமளிப்பவர்களுக்கான மொழிபெயர்ப்பின் தரம் மிகவும் மோசமாக இருந்ததாகவும், சாட்சிகளுக்கு அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பு கேள்விக்கிடமாக இருப்பதாகவும், விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் சில பதில்களை நிர்ணயித்து விட்டு அதனை பெறும் நோக்கில் கேட்கப்படுவது போல இருப்பதாகவும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து பிபிசியிடம் பேசிய மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பைச் சேர்ந்த பாக்கியஜோதி சரவணமுத்து இந்த நிலைமை ஆணைக் குழுவின் நடவடிக்கைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

குறிப்பாக முழங்காவில் மற்றும் பூநகரி ஆகிய இடங்களில் நடைபெற்ற விசாரணைகளின் போது மொழிபெயர்ப்பில் இடம்பெற்ற பல தவறுகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

சாட்சிகளுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்படாமை குறித்து கவலை வெளியிட்டுள்ள அந்த அமைப்பு, காணாமற் போனவர்களுக்கான ஆணைக்குழுவின் விசாரணை நடைபெறும் இடங்களில் பெருமளவு படையினர் காணப்படுவதாகவும் குற்றஞ்சாட்டுகிறது.

அத்தோடு விசாரணை நடைபெறும் இடங்களில் சாட்சியமளிக்க வருபவர்கள் புலனாய்வுப் பிரிவினர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்களால் புகைப்படம் பிடிக்கப்பட்டதாக அது கூறுகிறது. இப்படியாக படம் பிடிக்கப்படும் யுக்தி மூலம் சாட்சிகள் பயமுறுத்தப்படுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

அதேவேளை சில சந்தர்ப்பங்களில் சாட்சிகளிடம் கேட்கப்படும் கேள்விகள், ஆணைக் குழுவினர் ஏற்கனவே நிர்ணயித்த ஒரு பதிலைக் கூறும் வகையில் சாட்சிகளை இட்டுச் செல்ல முயற்சிப்பதை உணரக் கூடியதாக இருப்பதாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு கூறியுள்ளது.

இந்தக் கவலைகளை திறந்த விசாரணைகளின் போது தாம் அவதானித்த விடயங்களில் அடிப்படையிலேயே தாம் எழுப்புவதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

அதேவேளை, இந்த விடயங்கள் குறித்து தாம் ஆணைக் குழுவின் கவனத்துக்கு கொண்டுவந்ததாக பாக்கியஜோதி சரவணமுத்து தமிழோசையிடம் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீரத்துவைக்க அதற்கு அரசாங்கத்தின் உதவி தேவை. அரசாங்கத்தின் உதவியின்றி ஆணைக் குழுவால் இந்தப் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.